
தர்ம சக்கரம்



குரோதன ஹு வைகாசி மீ

சக்கரம் 34 ஆரம் 5

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115

திருச்சி ஜில்லா

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	குரோதன ஹு வைகாசி மீ	ஆரம் 5

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா : ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதை யும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா : ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா : மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி'யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

தென்ஆற்காடு ஜில்லா—கண்டாச்சிபுரத்தில் 19—5—85 ஞாயிறு

இடம்: அரசினர் மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

மதுரை ஜில்லா—பெரியகுளத்தில் 26—5—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வரதராஜப் பெருமாள் கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி: மதிய உணவு உண்டு, கட்டணம் இல்லை.

வடஆற்காடு ஜில்லா—போளூரில் 20—5—85 திங்கட்கிழமை

இடம்: கன்னிகா பரமேஸ்வரி தெரு ஸ்ரீ ராமபஜனை மந்த்ரம்
நேரம்: இரவு 7-00 மணிமுதல் 9-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

மயிலாடுதுறை தாலுக்கா—கோடங்குடியில் 23—5—85 வியாழன்

இடம்: கார்க்கோடேஸ்வரர் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் செய்தித்தாள்களில் உள்ளவை போன்று தாற்காலிகமானவைகளாக இல்லாமல் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் திரும்பவும் வாசிக்கக் கூடிய ஒரு நூலாக இது அமைகிறது. ஆதலால் ஓராண்டுக்கான பன்னிரண்டு தர்ம சக்கர இதழ்களையும் பொருளடக்கத்துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது ஒரு நல்ல புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும் மற்றவர்களுக்குப் படிக்கத் தருதற்கும் அது வசதியாக இருக்கும். அன்பர்கள் முயன்று புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்திப் பலரையும் ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடச் செய்யக் கோருகிறோம்.

சந்தா விவரம் பொருளடக்கத்தின்கீழ் தரப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34	குரோதன ௵ வைகாசி ௴	ஆரம் 5

பிரார்த்தனை

विश्वं दर्पणदृश्यमान नगरीतुल्यं निजान्तर्गतम्
पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया ।
यः साक्षीकुरुते प्रबोधसमये स्वात्मानमेवाव्ययम्
तस्मै श्री गुरुमूर्तये नम इदं श्री दक्षिणामूर्तये ॥

— शंकराचार्य

விச்வம் தர்ப்பண த்ருச்யமான நகரீ துல்யம் நிஜாந்தர்கதம்
பச்யன்னாத்மனி மாயயா பஹிரிவோத்பூதம் யதா நித்ரயா ।
யஃ ஸாக்ஷீ குருதே ப்ரபோதசமயே ஸ்வாத்மானமேவாவ்யயம்
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ॥

— ஆதிசங்கரர்

கண்ணடியில் தென்படும் தேசத்துக்கு நிகராகக் காணப்படும் தம்மிடத்தில் அடங்கியுள்ள பிரபஞ்சத்தை மாயாசக்தியினால் தோற்றுவிப்பவரும், ஞானநிலையிலிருந்துகொண்டு தம் சொருபத்தையே காண்பவரும், பேராசிரியருமாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

மாயா ஜகம்இலையேல் மற்றுஎனக்கு ஓர் பற்றும்இலை
நீயே நான் என்று வந்துநிற்பேன் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

பிரார்த்தனையால் வருகிற மனத்தெளிவு ஏட்டுப்படிப்பில் வராது.

ஈசனுடைய திருவுளத்துக்கு இணங்கி நடப்பவனே சான்றோனாகிறான்.

பிறரை ஆள விரும்புகிறவன் முதலில் தன்னையே ஆண்டு பழகவேண்டும்.

ஆழ்ந்த வியவகாரதசையும், விச்ராந்தியும் வேதாந்திக்கு ஒன்றேயாம்.

அகங்காரமற்றவனுடைய சாந்நித்தியம் பிறருக்குக் கேடு ஏதும் செய்கிறதில்லை.

பெண்பாலர் படைத்துள்ள பண்பே ஒரு நாட்டின் நாகரிகம் எனப்படுகிறது.

பிரபஞ்சத்தின் நடைமுறையைக் கொண்டு பரத்தை அறிந்துகொள்ள முடியாது.

உறுதியான உள்ளம் படைத்திருப்பவனுக்குப் பரஞானம் மிக எளிதில் வாய்க்கிறது.

அகத்திலுள்ள கசடுகளைக் களைந்துவிட்டுத் தூய அன்பில் ஆழ்ந்து மூழ்கி இருப்பாயாக.

பிரபஞ்சத்தில் எங்கு வேண்டுமானாலும் மனிதன் நலனையோ கேட்டையோ செய்யவல்லவனாயிருக்கிறான்.

அகத்தில் ஆனந்தத்தை அனுபவிக்கும் ஆத்ம சாதகனுடைய மனது புறத்தில் எதையும் நாடிச் செல்லாது.

உன்னிடத்து மறைந்துகிடக்கும் தெய்வீக ஆற்றலைச் செயலுக்குக்கொண்டு வருவதே செயற்கரிய செயலாம்.

இறைவனுடைய ஆணையை நிறைவேற்றுதலில் வெற்றி தோல்வி என்னும் பாகுபாட்டுக்கு இடமில்லை.

அணுமயமாயிருக்கும் நம்மை அகண்டமாயிருக்கும் ஈசனோடு எது இணைக்கிறதோ அது கோவில் எனப்படுகிறது.

ஏகதேச சுதந்தரம் என்பது பொருளற்றது. மனிதன் பந்தபாசத்தில் இருக்கிறான்; அல்லது முக்த புருஷனாகிறான்.

சுருதி அல்லது பரதத்துவம் ஸ்மிருதியாக மாறவல்லது. ஆகையால்தான் இந்துமதம் யாண்டும் வலிவுற்று மிளிர்கிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தர்களுக்கிடையில் பரமஹம்சதேவர் திருவாய் மலர்ந்தருளியதாவது: "பகவானுக் கென்றே தன்னுடைய வாழ்நாள் முழுதையும் ஒப்படைக்கின்ற பக்தன் பாக்யவானுகின்ருன். பக்தன் ஒருவன் சிறுவயதிலிருந்தே பக்தியின் விளைவாக மணம் புரிந்துகொள்வதில்லை என்று தீர்மானிப்பானுகில் அவன் தலைசிறந்த பாக்ய வானுகின்ருன். பகவான் கொண்டுள்ள திட் டங்களனைத்தும் அவன் வாயிலாக நிறை வேறப் பெறுகின்றன. அன்னவனுக்குத் திரு வருள் சகாயத்தால் குடும்பப் பந்தபாசம் ஒன் றும் உண்டாவதில்லை. அவனுடைய சகோத ரர்களோ, தந்தையோ அக்குடும்பப் பாரத்தின் பொறுப்புக்களனைத்தையும் ஏற்றுக்கொள்ளு கின்றனர். அந்தப் பக்தன் செல்லப் பிள்ளை போன்று அக்குடும்பத்தில் வாழ்ந்து வருகின் ருன். அவன் புரிகின்ற பகவத் கைங்கரியங் களுக்கு இடைஞ்சலாக உற்ருர் உறவினர் யாரும் எதிர்த்து வந்து நிற்பதில்லை. கூடிய வரை அவனுக்கு உதவி பண்ணும் மனப் பான்மை உடையவர்களாகக் குடும்பத்தார் அனைவரும் வந்து அமைகின்றனர். ஆதலால் அத்தகைய பக்தன் தங்கு தடையின்றி இறைவனுக்கென்றே தொண்டு புரிகின்ருன். அத்தகைய தொண்டன் ஒருவன் எடுத்துள்ள மானுடப் பிறவியின் மேலான நோக்கங்கள் நன்கு நிறைவேறுகின்றன.

"மற்றுக் காமத்திலும், காசு ஆசையிலும் உழலுகின்ற உலகத்தவன் மேலான குறிக் கோள் எதையும் அடையப் பெறமாட்டான். உலக ஆசைகளை ஒதுக்கித் தள்ளுதலின் வாயி லாக அக்ஞானமும் ஒதுக்கித்தள்ளப்படுகிறது. சூரியகிரணங்களை ஒரு பூதக் கண்ணுடியின் (லென்ஸ்) வாயிலாகச் செலுத்தினுல் அவைகள் குவிந்து ஒன்றுபடுகின்றன. அந்த ஒன்று பட்டுள்ள இடத்திலே வைக்கப்படுகின்ற ஊதுபத்தி அல்லது காகிதம் தீப்பற்றிக் கொள்ளுகிறது. சிதறடைந்து போகாது சூரிய கிரணங்கள் குவிந்து ஒன்றுபட்டதின் விளைவாக அச்செயல் நிகழ்கிறது. மற்று இருட்டறை ஒன்றனுள் சூரிய கிரணங்கள் செல்ல மாட்டா. ஆகையால் அவைகளைக் கொண்டு வெப்பத்தை அதிகப்படுத்தும் செயல் நிறைவேருது. உலக ஆசைகளில் உழலுகின்ற ஒருவனுடைய உள்ளம் இருட்ட றைக்கு நிகரானது. ஈசனுடைய சாந்நித்தி யத்தை அத்தகையவன் உள்ளத்தில் காணு தல் அரிது. பூதக்கண்ணுடியைப் பயன்படுத்த விரும்புகிற ஒருவன் இருட்டறையினுள் இருக் கலாகாது. அதை விட்டு அவன் வெளியே வரவேண்டும். அங்ஙனம் பகவானுக்குப் பணி விடை பண்ண விரும்புகிற பக்தன் ஒருவன் உலக ஆசைகளுள் அகப்பட்டுக்கொள்ளலா காது.

"ஞானி ஒருவன் உலகில் வாழ்ந்திருக்கின் ருன். அன்னவனுடைய வாழ்க்கையில் ஈசனு டைய மகிமைகள்யாவும் வெளிப்படுகின்றன. உலக பந்த பாசங்களில் உழல்கின்ற ஒருவன் நான்கு பக்கங்களிலும் அடைக்கப்பட்டுள்ள குடிசையில் வாழ்பவனுக்கு நிகராகின்ருன். அக்குடிசையினுள் உள்ள பண்டங்களும் பாத் திரங்களும் மங்கலாகத் தென்படுகின்றன. அத்தகைய குடிசையில் வாழ்ந்திருப்பவனுக்கு நிகராகின்ருன் உலகப்பற்றுடைய ஒருவன். மேல் கூரையிலும் சுவர்களிலும் கண்ணுடி அமைக்கப்பெற்ற மாளிகையில் வாழ்ந்திருப்ப வனுக்கு நிகராகின்ருன் ஞானி ஒருவன். வீட் டினுள்ளும், வீட்டுக்கு வெளியிலும் உள்ள அனைத்தையும் தெளிவுறப் பார்க்க வல்லவனு கின்ருன் ஞானி. உலக வியவஹாரங்களை ஞானி ஒருவன் அறிந்துகொள்வது போன்று உலகப்பற்றுடைய ஒருவன் அறிந்துகொள்ள மாட்டான். நல்லது எது, கெட்டது எது என் பதை ஈசுவரானுபூதி பெற்றுள்ள ஒருவன் அறிந்துகொள்வது போன்று உலகப்பற்று டைய ஒருவன் அறிந்துகொள்ளமாட்டான். இவ் வுலகத்தையொட்டிய அனைத்தும் நிலையற்றவை யென்பதை ஞானி அறிகிருன். ஆதலால் ஈசனுக் குரிய கிருத்தியங்களிலேயே அவன் ஈடுபடு கின்ருன். மற்று உலகப்பற்றுடையவனே உல

கப்பொருள்கள் அனைத்திடத்தும் வாஞ்சை மிக வைத்துள்ளான். நிலையற்ற நிலவுலக வாழ்க்கையிலேயே ஈடுபட்டவனாக அல்லும் பகலும் உழைத்து வருகிறான்.

"பிரபஞ்சமெங்கும் நிகழ்வன அனைத்தும் இறைவனுடைய செயல்களாம். அக்ஞானத்தால் மனிதன் தன் செயலுக்குக் கர்த்தா தான் என்று எண்ணிக்கொள்கிறான். இறைவனே அனைத்தையும் சாதிக்கிறார். நாம் அவர் கையிலுள்ள வெறும் கருவிகளேயாம். ஆதலால் அகங்காரம் படைத்திருப்பது யாருக்குமே பொருந்தாது. அப்படியிருக்கையில் ஞானி ஒருவனுக்கு அகங்காரம் எக்காரணத்தை முன்னிட்டும் வடிவெடுப்பதற்கு அவகாசமில்லை. சிவ மகிம்ன ஸ்தோத்திரத்தை இயற்றிய பக்தனுக்கு அகங்காரம் வந்துவிட்டது. தான் அருமையான ஸ்தோத்திரத்தை அமைத்திருப்பதாக எண்ணி அந்தப் பக்தன் செருக்குற்றிருந்தான். அதை அறியவந்த நந்தி திடீரென்று அவன் மீது பாய்ந்தது. அதன் விளைவாக அவனுடைய முப்பத்திரண்டு பற்களும் சிதறடைந்து போயின. அவனுடைய அகங்காரமும் அதன் விளைவாக அழிந்துபட்டுப் போயிற்று. அப்பொழுது உண்மையொன்று அப்பக்தனுக்கு விளங்கிற்று. தன்னிடமிருந்து சிதறடைந்துபோன பல் ஒவ்வொன்றும் சாஸ்வதமாக அமைந்திருந்த சிவ மகிம்ன ஸ்தோத்திரத்தின் ஒரு பதம் என அவன் அறியவந்தான். இதன் உட்பொருள் உங்களுக்கு விளங்குகின்றதா? சிவனுடைய மகிமை ஆதியந்தமில்லாது யாண்டும் இருந்துவருகிறது. அந்த மகிமை ஒரு பக்தனுடைய உள்ளத்தில் உதயமாகுமானால் அது அவன் பெற்றுள்ள சிவனாருடைய அருளுக்குச் சான்றாகிறது. அவனருளால் அவன் மகிமை பாடப்பெற்றது என்று உணர்தலுக்குப் பதிலாக அந்தப் பக்தன் தற்பெருமை பூணலானான். அதற்கேற்ற பாடத்தையும் நந்திதேவன் அவனுக்குப் புகட்டினான். சிவ மகிம்ன ஸ்தோத்திரத்தைப் பாடிய சான்றோன் ஏற்கனவே இருந்த அந்த மகிமையைப் பழைய பாடம் கற்பது போன்று தன் தூய உள்ளத்தில் உணரலாயினன். இதுவே ஆத்ம சாதகன் ஒருவன் கொள்ள வேண்டிய மன நிலையாம்.

"குலகுருவாயிருப்பது நல்லதன்று. அப்படியிருந்தும் அப்பழக்கமானது வங்காள மாகாணமெங்கும் அமுலில் இருந்து வருகிறது. நாம் கண்டு வருகிற குலகுரு அனைவரும் வெறும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் தற்பெருமைக்காகவும் அத்தொழிலை எடுத்துக்கொள்ளுகின்றனர். குருஸ்தானம் வகிப்பது அவ்வளவு எளிதன்று. இறைவனிடமிருந்து வருகிற ஆதேசத்தை அடையப்பெற்றவனே பிறர்க்கு ஏதாவது புகட்ட வல்லவனாகின்றான். இக்கோட்பாடானது மற்றொரு பாங்கில் கோயிலிலே அமைந்துள்ள கோபுரத்தின் வாயிலாகப் புகட்டப்படுகிறது. ஒவ்வொரு கோபுரத்தையும் தாங்குதற்கான கோபுரம் தாங்கிகள் நான்குபக்கமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வெளித் தோற்றத்திற்குக் கோபுரம் தாங்கிகள் கோபுரத்தைத் தாங்குவது போன்று தென்படுகின்றன. உண்மையில் கோபுரம்தான் கோபுரம் தாங்கிகளைத் தாங்கிக்கொண்டு இருக்கின்றது. இக்கோட்பாட்டின்படி இறைவன் தாமே செயல்கள் அனைத்திற்கும் கர்த்தாவாயிருக்கிறார். அகங்காரம் படைத்துள்ள மூடாத்மன் தன் செயலுக்குத் தான் கர்த்தா என்று அகங்கரித்துக்கொள்கின்றான். தன்னை ஒரு கோஸ்வாமி என்றோ குரு என்றோ கருதிக்கொள்கின்றவன் தத்துவத்தை அறிந்துகொள்ளாத வெறும் பாமரனேயாம். தராசு ஒன்றைப் பார்க்கின்றீர்கள் அல்லவா? அதினின்று நீங்கள் அறிந்துகொள்ளவேண்டிய பாடம் ஒன்று உள்ளது. தராசிலுள்ள கனமான தட்டுக் கீழே போகிறது. லேசான தட்டோ மேல் நோக்கி வருகிறது. இறைவனுடைய மகிமைகளை உள்ளபடி அறிந்துகொள்ளுகின்ற பக்தன் அல்லது ஞானி ஒருவன் அமைதியுற்றுப் பின்னணியில் இருக்கின்றான். அதற்கு நேர்மாறாக ஏதோ பகவானைப்பற்றி ஏட்டுக் கல்வியின் வாயிலாகச்சிறிது அறிந்திருக்கிறவன் தன்னைக் கோஸ்வாமி என்றும் குலகுரு என்றும் தற்பெருமையடித்துக்கொள்கிறான். இவ்வுலகில் நாம் காண்கின்ற விசித்திரம்தான் என்னே! ஒவ்வொருவனும் மேலானதாயுள்ள குருஸ்தானத்தை வகிக்க விரும்புகிறான். ஆனால் நல்ல சிஷ்யனைக் காண்பதுதான் அரிதிலும் அரிது. உண்மையிலே யார் ஒருவன் சரியாக அடி

பணிந்து பழகுகிருனே அவன்தான் ஆள வல்லவனுகிருன். குருடன் குருடனுக்கு வழி காட்ட முயலுவது போன்று அக்ஞானத்தில் உழலுகின்ற மாந்தர் குருஸ்தானம் வகிக்க அவா உறுகின்றனர். அன்னவர்கள் தங்களுக்கும் உலகுக்கும் கேட்டையே விளைவிக்கின்றனர்.''

பரமஹம்சர் அறையிலே அமைக்கப்பட்டிருந்த சிறிய கட்டிலுக்கு வடபுறத்தில் தரையின்மீது திரைலோக்யர் அமர்ந்திருந்தார். தம்பூராவைப் பக்கவாத்தியமாக வைத்துக் கொண்டுபரமனைக் குறித்துச்சங்கீர்த்தனங்கள் அவர் பாட ஆரம்பித்தார். அவர் குரலைக் கேட்ட பரமஹம்சர் 'ஆ! எத்தகைய இனிய குரல்,என்று வியப்படைந்தார். அவர் பாடிய கீர்த்தனத்தின் சாராம்சமாவது: "இறைவா! என்னுடைய உள்ளத்தை நான் உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன். பிரபஞ்சமாகத் தென்படுகிற அனைத்தும் உன்னுடைய பலப்பல விபூதிகளாம். இருக்கின்ற அனைத்துமாய் நீயே ஆயிருக்கின்ருய். ஆக, என் பார்வையை நான் எங்குத் திருப்பினலும் உன்னுடைய சாந்நித்தியத்தைக் காண்கின்றேன். ஓ இறைவா! என் உள்ளத்தை நீ கவர்ந்துள்ளாய். ஆகவே என் அன்புக்குரியவனே, அனைத்திற்கும் உறைவிடம் நீயே. இறைவா! உன்னுடைய சாந்நித்தியத்துக்குப் புறம்பாக உள்ள உள்ளம் இவ்வுலகில் எங்கேனும் உள்ளதா? உயிர்களனைத்தினுடைய உள்ளங்களில் நீ வீற்றிருக்கின்ருய். தோன்றியுள்ள அனைத்துமாய் நீயே காட்சி கொடுத்துக்கொண்டிருக்கின்ருய். சான்ருேன் என்ருே, பாமரன் என்ருே, ஹிந்து என்ருே, முஸல்மான் என்ருே பாகுபடுத்தாது அனைவரையும் நீயே ஆட்டி வைக்கின்ருய். நீயே உயிர்கள் அனைத்துமாய் இலங்குகின்ருய்.

"சொர்க்கமானுலும் சரி, பூலோகமானுலும் சரி, எங்குத் திரும்பிப் பார்த்தாலும் உன்னுடைய சான்னித்தியமே தென்படுகிறது. அனைத்துமாய் நீயே வடிவெடுத்திருப்பதால் உன்னுடைய முன்னிலையில் உயிர்கள் அனைத்தும் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கின்றன. மண்ணுலகிலும் விண்ணுலகிலும், பாதாளத்திலும் நீயே வீற்றிருக்கின்ருய். எங்குத் திரும்பிப் பார்த்தாலும் உன்னுடைய சான்னித்தியத்துக்குப் புறம்பாக ஏதுமில்லை. அனைத்துமாய் நீயே இலங்குகின்ருய். தெற்றென இவ்வுண்மை எனக்கு விளங்குகின்றது. இதைக் குறித்து ஐயம் ஏதுமில்லை. இறைவா, உன்னேடு சீர் தூக்கிப் பார்ப்பதற்கு வேறு ஏதேனும் உள்ளதா? நீயே உலகனைத்துமாக இலங்குகின்ருய் என்னும் பேருண்மையைப் பக்தனுகிய எனக்கு இறைவா, நீ காட்டியருளியுள்ளாய்.

"என்னுடைய உயிருக்குயிராய் அனைத்துமாய் இலங்குபவன் இறைவா, நீயேயாம். சொந்தம் பாராட்டுதற்கு மூவுலகிலும் இறைவா, உன்னைத் தவிர வேறு யார் உளர்? எனக்குச் சாந்தத்தையும், மகிழ்வையும், நம்பிக்கையையும் ஊட்டுபவன் நீயே. எனக்கு ஆதரவாயும் எனக்குச் செல்வமாயும், மகிமையாகவும் இருப்பவன் நீயே. எனக்கு நல்லறிவையும், உறுதிப்பாட்டையும் தருபவன் நீயே. எனக்கு உறைவிடமாயிருப்பவன் நீயே. நான் விச்ராந்தி அடைவதற்கேற்ற இடம் நீயே. என் ஆருயிர்த் தோழனுயும், உற்ருனுயும் இருப்பவன் நீயே. காலாதீதனை நீ எக்காலத்திலும் எனக்கு ஆதரவாய் அமைந்திருக்கின்ருய். நான் இன்புற்று இருப்பதற்கேற்ற சொர்க்கமாய் அமைந்திருப்பவன் நீயே. எனக்கு யாண்டும் ஆதரவு கொடுத்தருள்பவன் நீயே. எனக்கு நல்லறிவு புகட்டும் நூலாயிலங்குபவன் நீயே. என்னை நல்வழியில் நடாத்தி வருபவன் நீயே. யாண்டும் என்னை ஆண்டருளுகின்ற இறைவன் நீயே. எல்லையில் அடங்காத இன்பத்துக்கு இருப்பிடம் நீயே. நெறியும் குறியும் நீயே. போற்றுதற்குரிய பெம்மானே! உள்ளன்பே வடிவெடுத்துள்ள அன்னையாக இலங்குபவன் நீயே. கண்டித்து நல்வழியில் என்னை நடாத்தும் பிதாவாக இருப்பவனும் நீயே. உலகனைத்தையும் உண்டு பண்ணி அதைக் காத்து வருபவன் நீயே. வாழ்வு என்னும் படகை நல்வழியில் நடாத்துதற்கான நாயகன் நீயே. பிறவிப் பெருங் கடலைத் தாண்டி அக்கரை செல்வதற்கு உதவுபவன் நீயே. என்னுடைய செயல்களனைத்துக்கும் கர்த்தாவாக இருப்பவன் நீயே.''

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-7. தூய அறிவு ஆன சுகரூப ஜோதி தன்பால்
தீயில் இரும்பு என்னத் திகழுநாள் எந்நாளோ?

இரும்பானது சாதாரண நிலையில் கறுப்பாக விருக்கிறது. ஆகையினால் அதைக் கரும்பொன் என்றழைப்பது வழக்கம். அதைத் தீயில் போட்டுக் காய்ச்சினால் சிறிதுசிறிதாகப்பழுப்பு நிறம் தெரிகிறது. மேலும் காய்ச்சிக்கொண்டே போனால் பிரகாசம் நிறைந்த மஞ்சள் நிறமாக மாறுகிறது. அப்பொழுது இளகி அது திரவ பதார்த்தமாக வடிவெடுக்கிறது. மேலும் அதனிடத்து உஷ்ணத்தைச் செலுத்தினால் அது வெள்ளை நிறமாக மாறுகிறது. ஜடப்பொருள்களுள் ஒன்றாகிய இரும்பைப்பற்றிய உண்மை இதுவாம்.

இப்பிரபஞ்சம் ஜடம் சேதனம் ஆகிய இரண்டின் இணக்கத்தால் அமைந்துள்ளதாம். சேதனத்தில் ஏழு படித்தரங்கள் இருக்கின்றன. அவைகள் ஞான பூமிகள் எனப் பெயர் பெற்றுள்ளன. சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்து வருவது ஞான பூமியைப் பற்றிய கோட்பாடாம்.

ஏழு ஞானபூமிகளுள் ஆறுவது பூமியை எட்டியிருப்பது மானுடவர்க்கமாம். ஆயினும் மக்களுள் பலர் கீழ்நிலையில் உள்ள சிற்றுயிர்களின் பாங்கிலேயே உழன்று வருகிறார்கள். இது ஒருபுறம் இருக்கத் தத்துவத்துக்கு ஒத்தமுறையிலே வழிபாடு பண்ணுவது மானுடவர்க்கத்தின் தனிப் பாங்கு ஆகும் தீயிலிட்ட இரும்பு நிறம் மாறுவதும் ஒளிர்வதும் பிறகு திரவ பதார்த்தமாக மாறுவதும் ஜட உலகுக்குரிய கோட்பாடாம். அதே முறையில் தூய அறிவைப்பற்றி எண்ணுவதும் சுகம் அல்லது ஆனந்தத்தைப்பற்றி எண்ணுவதும் ஆத்ம ஜோதியைப்பற்றி எண்ணுவதும் கடவுள் வழிபாட்டின் கூறுகளாம். இம்முறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிப்பது மானுடனுக்கே சாத்தியமாகிறது. அதன் விளைவாக அவன் அறிவு சொரூபமாக மாறியமைகிறான். அந்த அறிவானது பௌதிக உலகத்தைப் பற்றியதாகவும், பரவஸ்துவைப்பற்றியதாகவும் வடிவெடுக்கிறது. அத்தகைய நிலையை யெட்டியுள்ள மனிதன் யோகி என அழைக்கப்பெறுகிறான். சாதாரண மனிதன் வாழ்க்கையின் விளைவாக யோகியாக மாறவல்லவன் ஆகிறான். ஜடவுலகின் கூறு ஆகிய உடலைத் தான் அல்லன் என்னும் உறுதிப்பாட்டில் நிலைத்திருப்பது யோக சாதனத்தின் முதற்படியாம். தன் வாயிலாக நிகழ்கின்ற செயல்களனைத்தும் இறைவனுக்குரியவை எனக்கருதி வாழ்ந்திருப்பது கர்மயோகமாம். ஐம்பொறிகளையும், மனதையும் கட்டியாளுவது ராஜயோகமாம். பிறகு பேரன்பே வடிவெடுத்தவனைத் திகழ்வது பக்தியோகமாம். இறுதியில் பேரறிவாகவும் பரமானந்தமாகவும் திகழ்வது முடிந்த ஞானயோகமாம். இங்ஙனம் நான்கு யோகங்களிலும் முன்னேறி வருவது மனிதனுக்குத்தான் சாத்தியமாகிறது. அத்தகைய மேலாம் பண்பாடுகள் அமையப்பெற்றுள்ள மக்கள் உலகில் எண்ணிக்கையில் அதிகரிப்பதற்கேற்ப உலகம் நலனனைத்தையும் அடையப்பெறுகிறது. பூரண யோகி என்று அத்தகைய மேலோன் அழைக்கப்பெறுகின்றான். இக்கண்ணியின் வாயிலாகத் தாயுமானவர் அடைய விரும்புவது பூரணயோகமேயாம். இதுவே இக்கண்ணியில் அடங்கியுள்ள உட்பொருளாகும்.

14-8. தீதுஅணையாக் கற்பூர தீபம்என நான்கண்ட
ஜோதியுடன் ஒன்றித் துரிசுஅறுவது
[எந்நாளோ?

தீப்பற்றி எரியும் பொருள்களுள் கற்பூரத்தினிடத்துத் தனிச் சிறப்பு ஒன்று உளது. ஒரு தட்டிலே ஏற்றி வைத்து எரிகின்ற கற்பூரம் ஒன்று தன் வடிவம் முழுதையும் இழக்கிறது. பிறகு சாம்பலோ கரியோ அத்தட்டில் எஞ்சியிருப்பதில்லை. கற்பூரம் எரிந்த அறிகுறி எதுவும் அத்தட்டினிடத்துத் தென்படுவதில்லை.

மானுட ஜன்மத்தின் முடிவான குறிக்கோளுக்கு உதாரணமாகக் கற்பூரம் அமைந்திருக்கிறது. மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்தறன் என்பது கோட்பாடு. மக்களின் எண்ணிக்கை அளப்பரியதாம். அகண்டத்தில் விரிந்தோடும் மக்கள் கூட்டத்தில் ஒரே பாங்கில் அமைந்துள்ள இரண்டு பேரைக்

காண்பது அரிதாம். எத்தனை மனிதரோ அத்தனை வித மனப்பாங்குகள் உள என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்துள்ளார். அத்தனைவித மனப்பாங்குகளையும் இரண்டாகப்பாகுபடுத்தலாம். இவை முறையே தெய்வ சம்பத்து எனவும் அசுர சம்பத்து எனவும் இயம்பப்பெறுகின்றன. சுயநலமே வடிவெடுத்திருப்பது அசுர சம்பத்து. அசுர இயல்பு படைத்திருப்பவன் மற்றவர்களைத் துன்புறுத்துவதில் மகிழ்வடைகிறான். அன்னவன் பிறவிப் பிணியைப் பெருக்கிக்கொண்டே போகிறான். இதற்கு நேர்மாறாகத் தெய்வ சம்பத்து ஊறியிருப்பவனிடத்துச் சுயநலம் ஏதுமில்லை. பரநலத்தின் பொருட்டே அவன் வாழ்ந்திருக்கின்றான். மன்னுயிர் அனைத்தையும் இறைவன் சொருபமாகக் கருதி அவர்களுக்குப் பணிவிடை பண்ணுவது அவனுடைய குறிக்கோளாகிறது. அத்தகைய பரந்த வாழ்க்கையின் வாயிலாக அவன் தூரிசற்றவனாகின்றான். அதாவது மனதிலே படிந்துள்ள தீமைகளும், கேடுகளும் அறவே அகன்று போகின்றன. அத்தகைய தூய மனம் படைத்திருப்பவனே சமுதாயத்திற்கு நலன் புரிய வல்லவனாகின்றான். நல்லார் புரிகின்ற நல்வினையின் விளைவாகவே சமுதாயம் யாண்டும் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

மனதற்ற பரிசுத்த நிலையை அடைவது மானுட ஜன்மத்தின் முடிவான குறிக்கோள் ஆகிறது. மாசு படிந்துள்ள மனது அத்தகைய பெருநிலையை எட்டுவதற்கு இடைஞ்சலாம். சுத்தமான கற்பூரம் போன்று மனத்துக்கண் மாசு சிறிதேனுமில்லாது மனிதன் பக்குவமடையவேண்டும். மனதில் அடங்கியுள்ள குறை நிலையை நிறை நிலையாக மாற்றுவதற்கே மனிதன் பிறவிகள் பல எடுத்து வருகின்றான். இங்ஙனம் எடுத்துள்ள பிறவிகள் வாயிலாகத் தன்னை முற்றிலும் தூய மனம் உடையவனாகத் திருத்தியமைத்துக் கொண்டவனுக்குக் கடைசிப் பிறவியாக வந்து வாய்ப்பது இத்தகைய யோகநிலையாம். பிறந்தது முதல்கொண்டு தூய வாழ்வு வாழ்ந்து தன்னைப் பரஞ்சோதியில் ஒன்றுபடுத்துவதே மானுட ஜன்மத்தின் முடிந்த குறிக்கோள். அத்தகைய நிலையை இந்த ஜன்மத்திலேயே பெற்றுப்பிறவிப்பெருங் கடலைத் தாண்டியவன் ஆகவேண்டும் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

காயத்ரீ

ओं भूर्भुवस्सुवः
ओं तत् सवितुर्वरेण्यं
भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥

ஓம் பூர்புவஸ்ஸுவ:
ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

यः ய: யார் नः ந: நம்முடைய धियः திய: அறிவை प्रचोदयात् ப்சோதயாத் தூண்டுகிறாரோ तत् தத் அந்த देवस्य தேவஸ்ய சுடருடைய सवितुः ஸவிது: கடவுளின் वरेण्यं வரேண்யம் மேலான भर्गः பர்க: ஒளியை धीमहि தீமஹி தியானிப்போமாக.

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக-

இது பிரம்ம காயத்ரீ அல்லது சூரியகாயத்ரீ. இதுவே நம் தேசீயப் பிரார்த்தனை. இதுவே நம் தேசீய மந்த்ரம். பல்லாயிரம் ஆண்டுகளாகக் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் இது கையாளப்பட்டு வந்துள்ளது. ஓம் அல்லது ஓங்காரம் ஓசைகள் அனைத்துக்கும் முதல் காரணம். இது நாதப்பிரம்மம் என்று இயம்பப்பெறுகிறது.

பூ: புவ: ஸுவ: ஆகிய மூன்று சொற்கள் பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கம் எனப் பொருள்படுகின்றன. இம்மூவுலகங்கள் அகத்திலும் இருக்கின்றன; புறத்திலும் இருக்கின்றன. பண்பாடு அடையாதவர்களுக்கு அம்மூவுலகும் புறத்தில் உள என்னும் கொள்கை ஏற்புடையதாகிறது. அகத்திலேயே அம்மூன்றும் அமைந்துள்ளன என்னும் கொள்கை சிறிதுபரிபாகம் அடைந்தவர்களுக்கே விளங்குகிறது. நம்மிடத்து இம் மூவுலகங்களும் ஜாக்ரதாவஸ்தை, சொப்பனவஸ்தை, சுஷுப்தி அவஸ்தைகளாக அமைந்துள்ளன,

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-16

விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவிலிருந்து அழகியசிங்கப்பெருமாளுக்கு எழுதிய கடிதத்தில் அடங்கியிருக்கும் கருத்துக்கள் மேலும் விளக்கப்பெறுகின்றன.

"தொண்டனுகைப் பணிவிடை பண்ணுவதே ஆத்மிகத்துறையில் முன்னேற்றமடைவதற்கு உற்ற உபாயமாம். இதற்கு நேர்மாருக உலகப்பற்றுடைய ஒருவன் எடுத்த எடுப்பிலேயே தலைவனுக வேண்டுமென்று ஆசைப்படுகிருன். அந்த ஆசை பொல்லாதது. அது அவனைக் கீழ்மையில் ஆழ்த்திவிடும். தலைவனுவது தகைமையை முன்னிட்டேயாம். அடிபணியத் தெரிந்துகொள்ளாதவனுக்கு ஆளும் திறமை ஒருபொழுதும் வராது.

பாசாங்குக்காகத் தொண்டுபுரிவது பொருந்தாது. நல்ல பக்தன்தான் நல்ல தொண்டனுகின்ருன். பாசாங்கு பண்ணி உலக காரியம் சிலவற்றைச் சாதிப்பது சாத்தியம். ஆனல் அருள்துறையில் பாசாங்கு ஒரு பொழுதும் பயன்படாது. ஆருயிர்களுக்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குரிய தொண்டு என்று பக்தன் ஒருவன் உணருகின்ருன். ஆகையினுல்தான் இறைவனிடம் பக்தி பூண்டுள்ள தொண்டன் ஒருவன் உள்ளன்போடு உழைக்கின்ருன். அவனுடைய உழைப்பு வீண் போகாது. வீண் போய்விடுமோ என்றுபக்தன் கவலைப்படுவதுமில்லை. என்னைக் கருவியாக வைத்துக்கொண்டு இறைவா, நீ செய்கின்ற செயலில் என்னுடைய உற்சாகம் ஒருபொழுதும் குறைந்துபட்டுப் போகலாகாது. வெற்றியும் தோல்வியும் உனக்கு உரியவைகள்." இத்தகைய மனப்பான்மை உருவெடுப்பதற்கேற்ப நீ சாதனத்தில் மேல்நோக்கிச் செல்லுவாய்.

சுயநலப்பற்றை ஒழித்தவனுக்கே அரும் பெரும் செயல் செய்வது சாத்தியமாகிறது. அத்தகையவன் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்படுவதில்லை. கடலிலே கொந்தளிப்பில் அகப்பட்டுக்கொண்டுள்ள கப்பல் ஒன்றின் நிலை எதுவாயினும் அதனுள் மாட்டிவைக்கப்பட்டிருக்கும் திசைகாட்டிமுள்ளானது வடதிசையையே நோக்கி நிற்கிறது. அதே விதத்தில் பக்தன் ஒருவன் எடுத்துக்கொண்டுள்ள முயற்சியிலே இடைஞ்சல்கள் முன்வந்து நிற்கலாம். தோல்வியே வந்து நேரலாம். உண்மையான பக்தன் அவற்றிற்கெல்லாம் அஞ்சுவதில்லை; ஆண்டவனுக்குரிய அரும்பணியிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிருன்.

பணத்தாசை பொல்லாதது. பொது நலனுக்காக உழைக்கின்றவர்களுக்கு இடைஞ்சலாயிருப்பது பணத்தாசையாம். சில வேளைகளில் எதிர்பாராது தேவைக்குமேல் பணம் வந்து சேருவதுண்டு. அப்பொழுது பேராசைக்காரன் தான் படைத்துள்ள ஆசைக்குப் பொருத்தமான வியாக்யானம் பண்ண ஆரம்பிக்கிருன். நான் பண்ணுவது இறைவன் பணி. அத்தகைய எனக்குச் சிறிது பொருள் உதவி பண்ண இறைவன் கடமைப்பட்டிருக்கிருன். ஆதலால் பொதுநலனுக்காக வந்துள்ள செல்வததில் ஒரு சிறுபகுதியை எனக்காகவென்று ஒதுக்கிவைப்பதில் தோஷம் ஒன்றுமில்லை. இது வீழ்ச்சியின் முதல்படி. ஜீவவியக்திக்குக் காரணமாயிருப்பது பணமன்று. அதாவது மனிதனை மேலோனுக்குவது செல்வமன்று. செல்வத்தைக் கையாள்வதினின்று மனிதனுடைய தரம் வெளியாகிறது. ஒரு கணப்பொழுதில் செல்வம் சேர்வதும் பிறகு கரைந்து போவதும் சாத்தியம். ஆனல் மனிதன் தன் பண்பைக் கரைந்து போகாது காத்து வைத்திருக்கக்கடமைப்பட்டிருக்கிருன்.

இக்காலத்தவர்கள் பணமில்லாது எக்காரியத்தையும் சாதிக்க முடியாது என்கின்றனர். ஆனல் அதற்கு நேர்மாருகப் பணத்தோடு எந்த விதமான தொடர்பும் வைத்துக்கொள்வதில்லையென்று பரமஹம்சதேவர் தீவிரமான விரதம் எடுத்துக்கொண்டிருந்தார். அதன் விளைவாக அவர் அடைந்திருந்தது மகோன்னதமான பாரமார்த்திகப் பெருநிலையாம். இத்துறையில் அவரைப் பின்பற்றுவதற்கேற்றவாறு நாமும் மேன்மையடைவோம். அன்பா! இக்கோட்பாட்டை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்வாயாக! அதற்கேற்றவாறு பொது நலனுக்கென்று சேகரிக்கப்பட்டுள்ள செல்வத்தைக் கையாளும் விஷயத்தில் யாண்டும் தூய்மை படைத்தவனுக இருப்பாயாக!

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

159. सर्गः ஸர்க: தோற்றத்துக்கு முதற் காரணமாயிருப்பவன்.

கடலினின்று ஆவியாக மேலே போகும் நீர் முதலில் தோன்ருநிலையில் இருக்கிறது. பிறகு அது வெண்மேகம், கார்மேகம் ஆக வடிவெடுக்கிறபொழுது தோற்றத்துக்கு வருகிறது. மேலும் மழையாகப் பெய்து மண்ணுலகில் வாழ்க்கைக்கு இன்றியமையாத நலன்கள் பல செய்கிறது. அதே விதத்தில் பிரளய காலத்தில் பகவான் தோன்ருநிலையில் இருக்கிருன். பிறகு சிருஷ்டி என்னும் தோற்றத்துக்கு வருகிருன். இக்காரணத்தை முன்னிட்டே 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்னும் கோட்பாடு வந்துள்ளது. பரம்பொருள் தானே இவ்வுலகனைத்துமாய் இருக்கின்ருன். உயிர்களோடு இணக்கம் கொள்கிற மனிதன் கடவுள் தான் இத்தனைவித உயிர்களாக வடிவெடுத்து இருக்கிருன் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அதினின்று உயிர்களோடு அவன் கொள்ளுகிற இணக்கம் தானுகவே திருந்தியமைகிறது.

"நாராயணனே உலகில் எல்லாவிதமாகவும் வடிவெடுத்து விளையாடுகின்ருன். புலியாக வடிவெடுத்திருப்பதும் நாராயணன். போக்கிரியாக வடிவெடுத்திருப்பவனும் நாராயணன். பக்தனுக வடிவெடுத்திருப்பவனும் நாராயணன். இனி, புலி நாராயணனை அணுகாதே. போக்கிரி நாராயணனேடு அதிகம் தொடர்பு வைத்துக் கொள்ளாதே. பக்தனுக இலங்கும் நாராயணனேடு வேண்டியவாறு ஒட்டி உறவாடு" என்கிருர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.

160. ध्रुतात्मा: த்ருதாத்மா: மாருத பாங்குடையவன். 159 வது நாமம் இறைவனே உலகனைத்துமாய் ஆயிருக்கிருன் எனப் பொருள்பட்டது. இந்த நாமமோ மாருத பாங்குடையவன் எனப் பொருள்படுகிறது. இவ்விரண்டுக்குமிடையே முரண்பாடு இருப்பது போன்று தோன்றுகிறது. உண்மையில் முரண்பாடு ஏதுமில்லை. சூரிய வெளிச்சம் யாண்டும் ஒரே பாங்குடையது. ஆயினும் அவ்வெளிச்சம் எதிரிலிருக்கும் மேகத்தின் வாயிலாகப் பாயும்பொழுது அது ஏழு நிறங்களாகச் சிதறலடைகின்றது. அந்த ஏழு நிறங்களை ஒன்ருேடு ஒன்று கூட்டுவதன் வாயிலாக மேலும் எத்தனை விதமான நிறங்களாக வேண்டுமானுலும் அமைத்துக் கொள்ளலாம். அவைகளுள் ஒரு நிறம் மற்ருெரு நிறமாகாது. எனினும் இத்தனை விதமான நிறங்களாகத் தன்னைக் காட்டிக்கொள்கின்ற மூல வெளிச்சம் யாண்டும் தன்மயமாயிருந்து வருகிறது.

எண்ணிறந்த உயிர்வகைகளாகப் பரமன் தன்னைக் காட்டிக்கொள்கிருன் எனினும் தன்னுடைய மேலாம் பாங்கினின்று அவன் மாருதிருக்கிருன். வேதாந்த பூர்வமாகப் பகருமிடத்துப் பரம்பொருள் யாண்டும் தன் சொரூபத்தினின்றும் பிசகாதிருக்கிருன். நாடகமேடையில் குருடனுக நடிக்கின்ற ஒருவன் உண்மையில் குருடன் அல்லன். பரம்பொருள் தானே எண்ணிறந்த வடிவங்கள் எடுத்து விளையாடுவது அவனுடைய மகிமையாம். எனவே இறைவனிடத்து இரண்டுவிதப் பாங்குகள் இருக்கின்றன. ஒன்று சொரூப லக்ஷணம்; மற்றது தடஸ்த லக்ஷணம். தனக்கு யாண்டும் சொந்தமாயுள்ள சொரூபலக்ஷணத்தினின்று பிசகாதிருப்பவன் ஈசன்.

மற்ற உயிர்வகைகள் தாங்கள் எடுத்துள்ள வடிவங்களை உண்மையானவைகள் என்று எண்ணிக்கொள்கின்றன. அப்படி அவைகளை எண்ணிக் கொள்ளும்படி செய்வது ஈசனுடைய விளையாட்டாம். உயிர்வகைகள் எடுத்துள்ள வெவ்வேறு கூறுகளின்மீது அவைகள் நம்பிக்கை வைப்பதால் பிரபஞ்சமெங்கும் பரிணமம் நிகழ்ந்து வருகிறது. பேதம் பரிணமத்திற்கு இன்றியமையாத கூறு ஆகும்.

இனி, ஆத்மசாதகன் தன் உள்ளத்தில் யாண்டும் குடிகொண்டிருக்கின்ற ஈசனுடைய சாந்நித்தியத்தை உணரக் கடமைப்பட்டிருக்கின்ருன். அது அவனிடத்துள்ள அபேதநிலையாம். சரீர அமைப்பில் தனக்கும் மற்ற உயிர்களுக்குமுள்ள பேதத்தை உணர்தலும் அதைத் தாண்டி மேலே செல்ல முயலுதலும் அவன் புரிகின்ற ஆத்ம சாதனமாம்.

161. नियमः நியம: உயிர்வகைகளுக்கேற்ற ஸ்தானங்களில் அவைகளை நிலைத்திருக்

கச் செய்கின்றவன்.

ஈசன் யாண்டும் தன் மயமாயிருந்துகொண்டு உலகிலுள்ள அனந்தங்கோடி ஜீவர்களாகவும் வடிவெடுத்து விளையாடுகின்றான். ஆயினும் அந்த விளையாட்டில் அவன் மயங்குவதில்லை. அரசனாக வடிவெடுத்து விளையாடுபவன் தனது ஸ்தானத்தினின்று பிசகுவதில்லை. தனக்கேற்ற கடமைகளையும் அதிகார பூர்வமாக நடாத்துவது அரசனுடைய செயலாம். இங்ஙனம் எல்லா உயிர்களுமாக இலங்குகின்ற ஈசன் அந்தந்த உயிர்களின் பாங்கினின்று பிசகாதும் நடந்துகொள்கிறான். ஆகையால் அவன் நியமம் என அழைக்கப்படுகிறான்.

162. यमः யம: அடக்கியாள்பவன். அஷ்டாங்க யோகத்தில் முதல் அங்கமாயிருப்பது யமம். அது அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்கிரஹம் என்று ஐந்து கூறுகளாக அமைந்துள்ளது. ஆதலால் யோகசாதனத்தில் ஈடுபடுகின்ற சாதகன் தன்னையடக்கி ஆளக் கடமைப்பட்டிருக்கின்றான். இந்த ஐந்து கூறுகளிலும் உறுதியாக நிலைத்திருப்பவன் தன்னை முற்றிலும் வென்றவனாகிறான். யம என்னும் சொல் யமதர்மராஜனையும் குறிக்கிறது. பிரபஞ்சத்தில் தோன்றியுள்ள உயிர்களனைத்தும் வாழ்வு என்னும் தோற்றத்துக்கு வருவதும் சாவு என்னும் தோன்றா நிலையையடைவதும் யமனுடைய ஆணையால் நிகழ்ந்து வருகின்றது.

163. वेद्यः வேத்ய: நலம் நாடுபவர்களால் அறிதற்குரியவர்.

பிரபஞ்சத்தில் எண்ணிறந்த உயிர்வகைகள் வாழ்ந்து வருகின்றன. அவை யாவும் வாழ்வைப் பலப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து வருகின்றன. மக்களில் பெரும்பான்மையோர் அதே செயலைத்தான் செய்து வருகின்றனர். வாழ்வின் நோக்கம் யாது? நாம் ஏன் இவ்வுலகுக்கு வந்துள்ளோம்? எங்கிருந்து வந்துள்ளோம்? செத்தபின் நம் கதி என்ன? இவைபோன்ற சீரிய ஆராய்ச்சி சிலருக்குத்தான் வாய்க்கிறது. பரம்பொருள் தீவிர ஆராய்ச்சியுடையவர்களாலேயே அறிந்துகொள்ளத்தக்கவராய் இருக்கிறார். நீர் ஆனது எந்த நிலையில் எங்கு இருந்தாலும் அது கடலுக்குரியது. அதே விதத்தில் உயிர்களனைத்தும் பரமபொருளிடத்து இருந்து வந்தவைகள். அவை யாவும் நிலைத்திருப்பதும் பரம்பொருளிடத்தேயாம். ஆனால் இவ் உண்மை எல்லார்க்கும் விளங்குவதில்லை. விளங்காத நிலையிலும் அவ்வுயிர்கள் பரம்பொருளுக்குப் புறம்பானவைகள் ஆகமாட்டா. பரம்பொருளுக்கும், ஜீவாத்மனுக்கும் உள்ள இணைபிரியாத இணக்கத்தை அறிந்துகொள்கின்றவர்களே நல்ல அறிவு படைத்தவர்கள் ஆகின்றனர். அவர்களுக்குப் பரநாட்டம் இயல்பாக வந்தமைகிறது. பரநாட்டம் வலுப்பதற்கேற்ப அவன் தாள் வணங்குதல் சாத்தியமாகிறது.

164. वैद्यः வைத்ய: வித்தைகளுக்கு இருப்பிடம்.

உலகிலுள்ள உயிர்வகைகளை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வோர் உயிரும் ஏதேனும் ஒரு துறையில் ஆழ்ந்த அறிவு படைத்திருப்பது வெளிப்படை. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். மக்கள் வாழ்ந்திருக்கும் இடங்களில் தான் காக்கையும் வாழ்ந்திருக்கிறது. ஆனால் இந்த இரண்டு கூட்டங்களுக்கிடையில் நல்லிணக்கம் இருக்கிறதென்று இயம்பமுடியாது. காக்கையைப் பற்றி மனிதன் உதாசீனனாக இருந்து வருகிறான். ஆனால் காக்கையின்பாங்கு அத்தகையதன்று. நகர முடியாது படுத்திருக்கும் நோயாளி அதை விரட்டியோட்டினால் அது அந்த இடத்தை விட்டுப் போகாது. பிறகு அவன் கையாளும் முறைக்கேற்றபடியே அது விலகிப் போகும்.

இனி வனத்தில் வாழ்ந்திருக்கும் விலங்குகளுக்கிடையில் கூரிய அறிவு (instinct) இயல்பாக அமைந்திருக்கிறது. மனிதன் அவைகளை வேட்டையாட வனத்துக்குப் போவானேயாகில் எத்தகைய ஆயுதத்துடன் எவ்வளவு ஆக்கிரமிப்புப்படைத்தவனாக அவன் வனத்துக்குள் வருகிறான் என்பதை அங்கு வாழ்ந்திருக்கும் விலங்குகளும் பறவைகளும் இயல்பாகவே அறிந்து அதற்கேற்ற முன்னெச்சரிக்கையையும், பாதுகாப்பையும் தேடிக்கொள்கின்றன.

இறைவனுடைய பேரறிவானது எல்லா உயிர்களிடத்தும் அதனதன் பாங்குக்கேற்றவாறு அமைந்திருக்கிறது. இறைவனுடைய மகிமையை அறிந்துகொள்ளுவதற்கு இது உற்றதோர் உபாயமாகிறது.

ஞான வெட்டியான் - 17

தேசாச்சாரம்

ஆச்சாரம் என்பது நல்ல ஒழுக்கமும் பழக்க வழக்கங்களுமாம். ஒழுக்கம் எல்லா நாடுகளிலும் ஒரே பாங்கில் அமையவில்லை. ஒரு நாட்டுக்கு நல்லொழுக்கமாக அமைந்திருப்பதை மற்றொரு நாட்டார் அதில் பயன் ஒன்றுமில்லை என்று புறக்கணிப்பதும் உண்டு. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். ஒருவன் சுவை பார்த்த உணவை மற்றொருவனுக்கு வழங்கலாகாது என்னும் கொள்கை இந்தியா முழுதுக்கும் பொதுவானது. ஆனால் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இந்தத் தேசாச்சாரம் நடைமுறையில் இல்லை.

நாகரிகத்தில் சிறந்த நம் நாட்டில் மற்றொரு பொருந்தாத பழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆடவர்களும் மகளிர்களும் ஒதுங்கிய வசதி வாய்ந்த எந்த இடத்தில் வேண்டுமானாலும் மலம் ஜலம் கழிப்பார்கள். அப்படிச் செய்வதில் குற்றம் ஏதும் இல்லை என்பதே பெரும்பான்மையோருடைய எண்ணமாம். குற்றம் அற்றதாகத் தென்படும் இப்பழக்க வழக்கம் நாகரிகம் வாய்ந்த உலகிலுள்ள பல நாடுகளில் பெரும் குற்றமாக எடுத்துக் கொள்ளப் படுகிறது. இந்திய மக்களுள் அறிவுடையோர் இப்பிரச்னையின்கண் பெரிதும் தங்கள் கருத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். விவேகமும் நல்வாழ்வில் ஊக்கமும் படைத்துள்ள இந்தியர் ஒருவர் இருபத்தைந்து நாள் லண்டன் நகரில் வசித்து வந்தார். அப்படி வசித்தவர் தாம் அங்குக் கவனித்த சிறப்பு ஒன்றைப் பேரார்வத்துடன் இந்தியப் பெரு மக்களுக்கு எடுத்து உரைத்ததாவது: ‘சரிக்குச்சரி எடை தங்கம் தருகிறேன்’ என்றாலும் மூலைமுடுக்குப்பக்கம் மலத்தையோ, மூத்திரத்தையோ காணமுடியாது. இதற்கு நேர் மாறாக நம் நாட்டிலுள்ள பெரிய பெரிய கோயில்களிலுள்ள மூலைகளிலும், முடுக்குகளிலும் மலமும், மூத்திரமும் கழிக்கப்பட்டிருக்கும். இனி, ஊருக்குள் வீதிகளின் ஓரங்களில் சிறுவர்கள் சர்வ சாதாரணமாக மலம் கழிவதும் மூத்திரம் பெய்வதும் நடைமுறையில் இருந்து வருகிறது. பெரிய பட்டணங்களில் நவீன முறையில் கக்கூஸ்கள் அமைக்கப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் எங்கு வேண்டுமானாலும் வெளிக்குப் போகும் பழக்கம் இம்மியளவும் நம் நாட்டை விட்டுப் போகவில்லை. இது பொருந்தாத பழக்கம் என்னும் எண்ணம் பெரும்பான்மையோர் உள்ளத்தில் இன்னும் சிறிதளவாவது இடம் பெறவில்லை.

மகாத்மாகாந்திஒருவர்தாம் இப்பொருந்தாத தேசாச்சாரத்தை அறவே அகற்ற முயன்று வந்தார். வாழ்நாள் முழுதும் அவர் பரத கண்டத்தின்பலபகுதிகளில் தேசசேவைக்காகவென்று பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தார். எங்குச் சென்றாலும் எக்கூட்டத்தில் கலந்து கொண்டாலும் ஆங்காங்குச்செய்யப்பட்டுள்ள கக்கூஸ் வசதிகளையே அவர் முதலில் கவனித்து வந்தார். நாட்டில் பெரும்பாலான இடங்களில் தண்ணீர் வசதி போதாது. அத்தகைய இடங்களில் எல்லாம் ஆங்குக் குடியிருப்பவர்கள் கழிக்கிற மலத்தையும், பெய்கிற மூத்திரத்தையும் உடனுக்குடனே மண்ணைப் போட்டு மூடும் முறையில் அவர் மிகக் கண்டிப்பாக இருந்தார். அத்தகைய இடங்களைத் தாம் நேரில் சென்று பார்த்துச் சுத்தப்படுத்தியான பிறகே அவர் அந்த இடத்தை விட்டுக் கிளம்புவார். வேண்டியவாறு தண்ணீர் வசதியுடன் நவீன முறையில் அமைந்துள்ள (flushout latrine) (நீர்ப் பாய்ச்சிக் குழாய் வழியாக மலஜலத்தை அப்புறப்படுத்துகின்ற முறை) எங்கு அமைந்திருக்கின்றதோ ஆங்கு அவர் அதிகம் கவனம் செலுத்த மாட்டார். ஆன்மீகத்துறையில் உச்சஸ்தானம் பெற்றிருக்கும் நம் நாட்டிற்குப் பக்தி பூர்வமாக யாத்திரை பண்ணும் பெரு மக்களுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்கள் நம் நாட்டைப்பற்றிக் கொண்டுள்ள மேலான எண்ணங்களுக்கு முதல் அதிர்ச்சியாக அமைவது இங்குப் பார்க்குமிடம் எங்கும் மலத்தின் காட்சியாம்.

ஆகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய தேசிய பேரியக்கம் மகாத்மா துவக்கி வைத்துள்ள இந்த இயக்கமேயாம். ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் ஆகிய எல்லாரும் இந்த இயக்கத்தில் பங்கு கொள்ளவேண்டும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (459) சிவபெருமான், அன்னபூரணியிடம் பிக்ஷை பெறுவதில் அடங்கியுள்ள கோட்பாடு என்ன?

அன்னபூரணி அகிலாண்டேஸ்வரியாய் இலங்குகின்றாள். உயிர்களனைத்தும் அவளிடத்திருந்து வந்தவைகள். ஆகையினால் அவள் ஜகன்மாதா என அழைக்கப்பெறுகின்றாள். உயிர்வகைகளைத் தோற்றுவிப்பதற்கிடையில் அந்தந்த உயிருக்கேற்ற உணவையும் அவள் தேடிவைப்பதற்குச் சான்று பிரபஞ்சத்தின் நடைமுறையேயாம்.

இனி, இத்தனை உயிர்களாக வடிவெடுத்திருப்பவன் இறைவனே. உலகனைத்தும் ஆனாய் நீயே என்பது கோட்பாடு. எல்லா விதமான உயிர்களுக்கும் உணவூட்டும் அன்னபூரணி சிவனாருக்குப் பிக்ஷை வழங்குவதின் வாயிலாக அவளிடத்தில் தோன்றி வந்துள்ள உயிர்களனைத்துக்கும் உணவூட்டி வளர்க்கின்றாள் என்னும் கோட்பாடு அடங்கியிருக்கிறது. இதை மற்றோர் உபமானத்தின் மூலம் விளக்கலாம். பெரிய மரம் ஒன்றுக்கு நீர்பாய்ச்சுவதற்கு ஒவ்வொரு கிளைக்கும் இலைக்கும் நீர் பாய்ச்சவேண்டிய அவசியமில்லை. மரத்தின் வேரில் ஊற்றும் நீரானது மரம் முழுதுக்கும் பயன்படுகிறது. அதே பாங்கில் ஈண்டு உயிர்கள் அனைத்தின் தொகையாகச் சிவனார் இலங்குகின்றார். உயிர்களைப் பேணுதல் நல்ல சிவ வழிபாடு ஆகிறது என்னும் கோட்பாட்டிற்கு இலக்காக மாதா அன்னபூரணி சிவனார்க்குப் பிக்ஷை வழங்குகின்றாள். பெரிய தத்துவம் ஒன்று இங்ஙனம் மாதா அன்னபூரணி சிவனாருக்கு உணவு படைத்தல் வாயிலாக உருவகப்படுத்தி விளக்கப்படுகிறது.

மற்றோர் ஐதிகமும் அன்னபூரணி சிவனாருக்குப் பிக்ஷை போடுதலில் அடங்கியிருக்கிறது. சிவனாருக்கு விஸ்வநாதன் என்று பெயர். அண்டங்களனைத்துக்கும் சிவனே அதிபதியாயிருக்கின்றார் என்பது கோட்பாடு. அப்படியிருக்கின்ற சிவனார் ஸ்மசானத்தில் வாழ்ந்திருக்கின்றார் என்பது ஐதிகம். தம் சொருபத்தின் வாயிலாகச் சிவனார் உலக மக்களுக்கு அரிய பாடம் ஒன்றைப் புகட்டி வருகின்றார். மானுடா! இப்பிரபஞ்சத்தில் உனக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை என்னும் உண்மையை மறந்து விடாதே. மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் மனிதனை வந்து தாக்குகிறது. அதற்கு ஆயத்தமாயிருப்பவனே நல்லறிவு படைத்தவனாகின்றான். "செத்தாரைப்போல் திரிநெஞ்சே" என்பது கோட்பாடு. உயிர் வாழ்ந்திருக்கும் பொழுதே மனிதன் உலகப்பற்று அனைத்தையும் ஒதுக்கிவைக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். இப்பாடத்தைச் சிவனார்தாமே பிக்ஷைஏற்றுண்பதின் வாயிலாக உலகுக்குப் புகட்டுகிறார்.

மற்றோர் உண்மையை மனிதன் மறந்துவிடலாகாது சிவனார் ஏற்பதும் சிவ சொரூபமாகிய துறவிகள் ஏற்பதும் பிக்ஷை. இதற்கு மாறாக வறியர்கள் ஏற்பது ஐயம். பிக்ஷை ஏற்பது ஞானத்தின் விளைவு; ஐயம் ஏற்பது அஞ்ஞானத்தின் விளைவு. ஐயம் ஏற்பது இகழ்ச்சி. பிக்ஷை ஏற்பது பாராட்டுதற்குரிய பெரும் செயலாம்.

கேள்வி: (460) ஜாதியை முற்றிலும் ஒழிக்க இயலுமா?

ஜாதியை முற்றிலும் ஒழிக்க முடியாது. ஜாதி வேற்றுமையினால்தான் பிரபஞ்சம் நடைபெறுகிறது. சிருஷ்டி என்பதன் பொருள் வேற்றுமை. சிருஷ்டிக்கு எதிரிடையாயிருக்கின்ற பிரளயமாவது ஒற்றுமை. நனவு அல்லது ஜாக்ரதாவஸ்தை சிருஷ்டி. அயர்ந்த உறக்கம் அல்லது சுஷுப்தி அவஸ்தை பிரளயத்திற்கு நிகர். நனவில் காட்சிகொடுக்கும் இயற்கையில் விதவிதமான புல் பூண்டு மரம் செடி கொடிகள் இருக்கின்றன. இனி வாழையில் எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன. தென்னையும் அத்தகைய பாங்குடையதேயாம். நீர் வாழ்வனவற்றுள் விதவிதமான மீன்கள் இருக்கின்றன. பாம்பு, பட்டுப்பூச்சி ஆகியவைகளில் ஜாதிவேற்றுமைகள் ஏராளமாக உண்டு. காட்டில் வாழும் விலங்குகளுள் யானை, புலி, கரடி, மான் ஆகியவைகளில் ஜாதி வேற்றுமை உண்டு. பறவைகளின் பாங்கும் அத்தகையதேயாம். மக்களுள் மங்கோலியன் டைப், காக்கேசியன் டைப், நீக்ரோ டைப் ஆகிய மூன்று பிரிவுகள் முக்கியமானவைகளாம். இவைகளுக்குள் வேற்றுமையும் வேண்டிய

வாறு இருக்கின்றது. இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ளவர்கள் காக்கேசியன் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆயினும் அவர்களுக்குள் உள்ள வேற்றுமை கணக்கிலடங்காது. இத்தனைவித வேற்றுமைகளை ஒழிப்பது எப்படி?

ஜாதியை ஒழிக்க முடியாது. ஆனல் பண்பட்டுள்ள மக்கள் ஜாதிக்கொடுமையை ஒழித்தல் வேண்டும். இயற்கையைத் துருவி ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு ஜாதியினிடத்திலும் தனிச்சிறப்பு உண்டு. சீர்கேடுகள் ஆங்காங்குத் தென்படுகின்றன. மக்களுள் கெட்டவர்களை நல்லவர்களாகத் திருத்தியமைப்பது சீரிய செயலாகிறது. இனி எவ்வளவுதான் முயன்ருலும் கெட்டவர்களுள் சிலரை நல்லவர்களாகத் திருத்தியமைக்க முடியாது. சாத்தியப்படுகின்ற இடங்களில் எல்லாம், தரத்திலே கீழோராயிருப்பவர்களை மேல் நிலைக்குக் கொண்டுவருவது பாராட்டுதற்குரிய செயலாம். அச்செயல் கடவுள் வழிபாட்டுக்கு நிகரானது.

கேள்வி: (461) Religion is not for empty stomachs. ஏழைமக்களுக்கு மத போதனை தேவையா?

மதபோதனை வேறு, ஏழ்மை வேறு. ஏழ்மை பொருளாதாரத்துறையைச் சார்ந்தது. சமயம் பண்பாட்டைச் சார்ந்தது. ஒழுக்கம் விழுப்பம் தரலான்—ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது சமயக்கோட்பாடு. பொருளாதாரத்தோடு இதை இணைக்கலாகாது. ஈண்டு மற்ருெரு கோட்பாட்டையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். வறுமையில் வாடிக் கிடப்பவர்களுக்கிடையிலும் மிகைபட்ட செல்வத்தை முன்னிட்டுச் சுகஜீவனத்தில் சொக்கியிருப்பவர்களுக்கிடையிலும் மதபோதனை செல்லாது. இவையிரண்டும் நல்வாழ்க்கைக்கு இடைஞ்சலாம். மதத்தின் குறிக்கோள் மனிதனை மேலோன் ஆக்குதல். மேலோன் ஆவதற்கு இடைஞ்சலாயுள்ள மிகைப்பட்ட செல்வத்தை எடுத்து வறுமையில் வாடிக்கிடப்பவர்களுக்கிடையில் வழங்குதல் முறை. ஆனல் அதைப் பலாத்காரத்தால் கையாளலாகாது. மனதை நல்ல மனதாக மாற்றியமைப்பது சமயம். இங்ஙனம் சுகஜீவனத்தில் மூழ்கியிருப்பவன் மனதை மாற்றுவதும் அவன் படைத்துள்ள மிகைபட்ட செல்வத்தில் ஒரு சிறு பகுதியை எடுத்து ஏழைகளுக்கு வழங்கும்படி செய்வதும் நல்ல சமய அனுஷ்டானமாகும்.

வறுமைக்கு மூலகாரணம் பெரிதும் முயற்சியின்மையே ஆகும். ஒரு சிறிதளவு பொருள் உபகாரம் செய்வதற்கிடையில் சோம்பியிருப்பவனை முயற்சியில் தூண்டுவது அவசியம். சோம்பிக் கிடப்பது பொல்லாத நோய். தன் கையே தனக்குதவி என்னும் நல்ல மனப்பான்மையை அவனுக்கிடையில் ஊட்டுவது முற்றிலும் அவசியம். இங்ஙனம் சமுதாயத்தில் உள்ள கேடுகளை அகற்றவல்லது சமய உணர்ச்சி ஒன்றேயாம். தக்கமுறையில் சமயத் தொண்டர்கள் பேரூக்கத்துடன் பணிவிடை பண்ணிச் சமுதாயத்தில் உள்ள கேடுகளனைத்தையும் அகற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

கேள்வி: (462) புத்தர் இறந்தவரை உயிர்ப்பிக்கவில்லை. ஆனால் சைவ சமய இலக்கியங்களில் இச்செயலைப் போற்றுகின்றனரே? இந்த முரண்பாட்டைச் சமரசப்படுத்துவது எப்படி?

உலகிலே தோன்றியுள்ள சான்ருேர்களுள் புத்தர் பெம்மான் அலாதியான இடம் பெறுகிருர். அறிந்தோ அறியாமலோ மற்ற சமயாச்சாரியர்கள் செய்துள்ள அதிசயச் செயல்களை அவர் அறவே ஒதுக்கி வைத்தார். பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற செயல்களை அமைதியாக ஏற்றுக்கொள்ளுதல் என்னும் கோட்பாடு அலாதியாகப் புத்தர் பெருமானுக்கு உரியதாம். செத்தவர்களை எழுப்புதல் போன்ற செயல்களை ஏனைய மதாச்சாரியர்கள் இறைவனுடைய அருளை நாடிச் செய்தார்கள். அப்படிச் செய்தவர்கள் தாங்களே பிறகு மடிந்துபோனர்கள். சாவினின்று உயிர் பெற்று எழுந்தவர்களும் பிறகு மடிந்து போனர்கள். ஆதலால் பிறப்பெடுத்துள்ள உயிர்களனைத்தும் காலக்கிரமத்தில் மடிந்துபோகும். இத்தகைய இயற்கையின் செயலில் மனிதன் தலையிடலாகாது என்பது புத்தர் பெருமானுடைய கொள்கை. அவருடைய கொள்கைதான் தத்துவத்துக்கு ஒத்தது. ஏனைய மதாச்சாரியர்கள் செய்தவை அனைத்தும் தாற்காலிகமாக மனிதனுக்குத் திருப்தியை அளித்தன. ஆனல் மரணம் குறைந்து பட்டுப்போகவில்லை. ஆகவே புத்தர் பெருமானுடைய முடிவுதான் பொருத்தமானது.

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு V. S. நரசிம்மன்)

இயேசுவின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க அம்சம் அவர் விளம்பரத்தை விரும்பாது இருந்தது ஆகும். பொய் வேஷம் போடுபவர்கள் விளம்பரத்திற்கு ஆசைப்படுவார்கள். உண்மையான பக்தன் கடவுளுடன் தன்னுடைய தொடர்பை இரகசியமாகவே வைத்துக் கொள்வான்; வெளியுலகத்திற்கு அதை அவன் தம்பட்டம் அடிப்பதில்லை. தாம் முதலில் சமய வாழ்க்கையை அனுஷ்டித்தார்; அதன் பின்புதான் மனித குலத்திற்கு உபதேசம் செய்யத் தொடங்கினர்.

கடவுளின் அவதாரமாக இருப்பவர் ஆன்மீக தத்துவங்களைத் தம் வாழ்வில் கடைபிடித்து வாழ்வது மூன்றாவது இலட்சணமாகும். ஆன்மீக நெறிகள் அனைவருக்கும் பொதுவானவை. எனவே சத்தியத்திற்கும், தூய்மைக்கும் தனி உரிமை கொண்டாட எவருக்கும் அதிகாரம் இல்லை. "இதய சுத்தி உள்ளவர்கள் பாக்கியவான்கள்— Blessed are the pure in heart"– இது ஒரு தத்துவம். இது ஒரு குறிப்பிட்ட மதக் கொள்கை அன்று. இந்தத் தத்துவத்தை உபதேசித்த இயேசு கிறிஸ்து, அதற்கேற்ப வாழ்ந்தவர். தாம் மேற்கொண்ட வாழ்க்கையைப் பின்பற்றும்படி அவர் மற்றவர்களுக்கு உபதேசித்தார். தூய வாழ்வு வாழ்பவனே ஆன்மீகவாதி; ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவன் என்ற முத்திரையோடு அலைபவன் சமயவாதி ஆகமாட்டான். இந்தக் கருத்தை வேறு முறையில் அவர் கூறுகிறார். "ஆண்டவனின் எண்ணத்திற்கு ஏற்ப நடப்பவனே அவருடைய பக்தன்; அவருடைய பெயரைச் சொல்பவன் அல்ல." இறைவனின் திட்டமும், ஆன்மீகத் தத்துவமும் இங்கு ஒன்றாகக் கருதப்படுகின்றன. "சொர்க்கத்தில் உள்ள ஆண்டவனைப் போல் நீயும் நிறை மனிதனாக இரு—Be ye as perfect as thy Father in Heaven"– சமய நெறியில் மனிதன் எய்தக் கூடிய லட்சியத்தின் எல்லை இது. எனவே மதக் கொள்கைகளும், குறிப்பிட்ட சடங்குகளும் ஒதுக்கி வைக்கப்பட்டுத் தத்துவம் மட்டுமே ஆராயப்பட வேண்டும். மனிதன் துவக்கத்தில் குறிப்பிட்ட மதச் சடங்குகளைப் பின்பற்றலாம். ஆனால் இறுதி வரையில் அதில் மூழ்கி இருக்கலாகாது. "It is good to be born in a church, but never to die there" என்ற விவேகானந்தரின் உபதேசத்தை இங்கு நினைவு கூறவேண்டும். மனிதன் நல்ல சாதனை முறையால், ஒழுக்க நெறியால் முன்னேறி நிறை மனிதன் ஆகின்றான். உணவு பலவகையாக அமைந்தாலும், உடலுக்கு வேண்டிய சத்து அதன்மூலம் கிடைக்கின்றது. அங்ஙனம் நன்முறையில் சாதனை செய்பவனே நிறை மனிதன் ஆகின்றான். ஏசுகிறிஸ்து வலியுறுத்துவது அத்தகைய நிறை வாழ்வே. ஏதோ ஒரு குறிப்பிட்ட மதநெறியில் வாழவேண்டும் என்பது அவருடைய உபதேசம் அன்று. வாழ்க்கை முறையே முக்கியம்; ஒரு மதத்தின் குறிப்பிட்ட டிரேட் மார்க்கை—குறியை—ஏற்பது என்பது அவருடைய உபதேசத்தின் பொருளன்று.

நிறை வாழ்வை நோக்கிப் பயணம் செல்லும் ஆத்ம சாதகன், உலக மயமான தடைகளைத் தாண்டி, அனைத்திற்கும் அப்பாற்பட்ட தெய்வீகத்தில் நிலை பெறுகின்றான். அந்தப் பேரின்ப நிலையை அடையுமுன், தன்னுடைய வாழ்வில் அவன் அனுபவித்த இன்பங்கள் எல்லாம் தோற்றமளிக்கின்றன. இன்பத்தைப் பற்றிய எண்ணமே அவன் மனதில் ஒருவித கிளுகிளுப்பை உண்டாக்கும். எனவே அவற்றை ஒரு சிறிதளவு மறுபடியும் அனுபவிக்கலாமே என்ற வேட்கை மெல்ல எழுகிறது; வைராக்கியத்தை விடாமல் சிறிதளவு போகம் துய்ப்பது தவறு அன்று என்ற விபரீத மனப்பான்மையும் இன்பத்தையும், யோகத்தையும் சரிப்படுத்தும் எண்ணமும் மேலோங்கும். இதனையே temptation—ஆசையிலேயே அகப்படுதல் என்பார்கள். புத்தருக்கு அந்த நிலை ஏற்பட்டது. அவர் இந்த உணர்ச்சியை 'மாரா' என்று உருவகப்படுத்தி, அப்புல்லிய பாங்கை விரட்டி அடித்தார். இயேசு கிறிஸ்து அதை 'சாத்தான்' என்று அழைத்து விரட்டினர். வேதாந்தம் இதைச் சிற்றியல்பு என்றும் கீழான விலங்குத் தன்மை என்றும் வர்ணிக்

கின்றது. எனவே எல்லாச் சாதகர்களுக்கும் இந்த நிலை பொது. ஏனைய ஆச்சாரியர்களைப் போலவே இயேசுவும் இந்த நிலையை வர்ணித்து, அதை வெற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றார்.

அவதார புருஷன் ஒருவன் பிறவி முதற் கொண்டு அற்புதச் செயல்களைச் செய்யும் சக்தி உடையவனாகத் திகழ்வது நான்காம் சிறப்பு. ஒவ்வொரு மனிதனிடமும் ஆன்மீகச் சக்தி உள்ளது. அது வெளிப்படும் விகிதம் மட்டுமே மாறுபடும். உலகத்தை உய்விக்கவந்த அவதார புருஷனிடத்தில் அது முழுமையாக இயல்பாக வெளிப்படுகின்றது. "என்னிடம் தங்கமோ, வெள்ளியோ கிடையாது. இறைவன் நாமத்தைச் சொல்; உனது படுக்கையை சுருட்டிக்கொண்டு என் பின்னே வா" என்று சாதாரண மனிதனை ஆன்மீக உணர்வுகொண்டு எழும்படியாக அவர் செய்ய முடிகின்றது. ஒளி வீசிக்கொண்டிருக்கும் விளக்கு ஒன்றைக் கொண்டே அடுத்த விளக்கை ஒளியூட்ட முடியும். ஆன்மீக ஞானி ஒருவர் மனிதனிடத்துத் தெய்வீகத்தைக் கிளர்ந்து எழச்செய்ய முடியும். ஆயின் ஆண்டவனின் மகன் அதை அதிகாரத்துடன் செய்ய இயலும். காட்டில் தோன்றிய நெருப்பு ஈரம் கசியும் மரங்களையும் எரிக்கும்வலிமை வாய்ந்தது. அதுபோன்று இறைவனின் ஆதேசம் பெற்ற லோக குரு உலக வாழ்வில் தோய்ந்து இருப்பவனையும் ஆன்மீக நெறியில் செலுத்த முடியும். இந்தச் சக்தி இயேசுவிடம் அதிகம்காணப்படுகின்றது. காலத்தால் இந்த ஆன்மீகச் சக்தி குறையாது. அவதார மூர்த்தியின் சரீரம் அழிந்தாலும், கட்புலனுக்கு அகப்படாத நுண் முறையில் அவருடைய தெய்வீக அருள் இயங்குகிறது.

இறைவனின் அவதாரமாக வருபவர்கள் இறைவனோடு சமமானவர்கள். எனவே தெய்வீகமும், தெய்வீக மனிதர்களும் வேறு பட்டவர்கள் அல்லர். சரீரத்தில் கட்டுண்டு கிடக்கும் ஜீவனுக்குத் தெய்வீகத்தை உணரும் சக்தி இல்லை; ஆயின் தெய்வீக புருஷனின் வாழ்வை அறிந்துகொண்டு, அதன் மூலம் தெய்வீகத்தை அவன் புரிந்துகொள்ளவேண்டும். எனவே அவதார புருஷர்களின் வாழ்க்கை வரலாற்றில் தெய்வீகம் ததும்பி இருப்பதில் வியப்பேதுமில்லை. ஆத்மீக வாழ்விற்கு மேற்கொள்ள வேண்டிய நெறிகளை விளக்கும் செய்முறைப் பயிற்சியாக-practical lesson-அவர்கள் வாழ்வு திகழ்கின்றது. எனவே அவர்கள் உலகில் வாழும் ஒவ்வொரு கணமும் மற்றவர்களைப் புத்துணர்ச்சி கொள்ள வைக்கின்றனர். அவர்கள் வரலாற்றை எத்தனை முறை படித்தாலும் அலுப்புத் தட்டுவதில்லை. படிக்கப்படிக்கப் புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன. அவருடைய வாழ்வில் தெய்வீகத்தை மலர வைக்கும் சக்தி உள்ளது. இந்த முறையில் ஆராய்ந்தால், இயேசுவின் வரலாறும் போற்றத்தக்கது; ஸ்ரீ ராமாயணம், மகாபாரதம் போன்று இந்த வரலாறும் உள்ளத்தைப் பண்படுத்தும். காலப் போக்கில் இதற்குப் பெருமையும் அதிகரிக்கின்றது; இந்த லட்சணத்தை வைத்துத்தான் ஹிந்து இயேசுவையும் அவதாரமாகக் கொள்கிறான்.

தர்மத்தைக் காத்து அதர்மத்தை அழிப்பது அவதார மூர்த்தியின் ஐந்தாவது சிறப்பு. ஞானமே மதத்தின் சக்தி. உலகைப் பற்றிய அறிவு விஞ்ஞானம் ஆகும். தெய்வீக அறிவு மதத்தின் சக்தியாகும். 'தமஸோமா ஜ்யோதிர் கமய'—அஞ்ஞானத்தினின்று ஒளிமயமான ஞானத்திற்கு என்னை எடுத்துச் செல்' என்பது வேதகாலப் பிரார்த்தனை. ஆன்மீகஞானத்தால் மனிதனின் தெய்வீக இயல்பு அறியப்படுகின்றது. ஆத்மன் அழிவற்றது, நித்தியமானது. இந்த ஆத்ம ஞானத்தைச் சாதகன் அவதாரபுருஷனிடமிருந்து அடைகின்றான். ஆத்ம ஞானத்தைத் தவிர அடையக்கூடிய பேறு எதுவும் இல்லை. "இறைவனின் அரசாட்சியை அடைந்து விடு; உனக்குத் தேவையானது அனைத்தும் சேர்க்கப்படும்'' என்பது இயேசுவின் வாக்கு. இதுதான் ஆத்ம வித்யா. இதன் மூலம் சம்சார சாகரத்தில் இருந்து அவன் விடுதலை பெறுகிறான். இயேசுவை ஆத்ம வித்தை பொருந்தியவராக ஹிந்து கருதுகின்றான் ஹிந்து தத்துவத்தைப் போற்றுகிறான். இயேசு ஆத்ம ஞானம் பெற்றவராக விளங்குகிறார். மக்களுக்கு ஆத்ம ஞானத்தைப் புகட்டும் சிறந்த போதகராகவும் இருக்கிறார். எனவே, இயேசுவை ஹிந்து பாராட்டுவதில் வியப்பேதுமில்லை.

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

(பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்)

[134 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேச பக்தி

ஸர் வால்டர் ஸ்காட் என்னும் ஆங்கிலக் கவிஞர் தேசபக்தி இல்லாதவன்செத்தவனுக்கு நிகராவான் என்று மனம் நொந்து கூறுகிறர். உள்ளத்தில் நாட்டைப் பற்றிய உணர்வு இல்லாதவன் உயிருடன் வாழ்வதில் யாது பயன்? "இது என்னுடைய நாடு; இது என் தாய் நாடு" என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்ளாதவன் உயிருடன் வாழ்வதில் என்ன பயன்?

தாய் நாட்டை விட்டு அந்நிய தேசங்களில் பல நாட்கள் இருந்துவிட்டு மீண்டும் தன் தாய் நாட்டுக்குத் திரும்பும் பொழுது தாய் நாட்டை விட்டுப் பிரிந்திருந்த துயரத்தில் உள்ளம் கொதிக்க வேண்டாமா? அப்படி உள்ளம் கொதிக்காதவன் ஒருவன் இருப்பானகில் அவனைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவன் இப்பூமியில் வாழ்ந்தும் வாழாதவனுகின்ருன்.

தாய் நாட்டுப் பற்று இல்லாதவன் உயர்ந்த பதவிகளில் இருக்கலாம்; அவன் செல்வம்மிகப் படைத்தவனுக இருக்கலாம். தனக்கு அமைந்துள்ள பெயரையும் புகழையும் குறித்துப் பெருமை கொள்பவனுக இருக்கலாம். ஆனல் அவைகளெல்லாம் பயனற்றவை. அவனைக் குறித்து எந்தக் கவிஞர்களும் பாடமாட்டார்கள். அவன் ஒரு சுய நலக்காரன். அவன் கடைப்பட்ட மனிதன். நாட்டு மக்களுக்காக வாழாத ஒருவன் வாழ்ந்திருப்பதில் பயன் என்ன? அவன் உயிருடன் வாழ்ந்திருக்கும் பொழுதே செத்தவனுக்கு நிகராகிருன். விலங்குகள் உடல் உணர்வு படைத்திருக்கின்றன. அவைகளுக்கு ஆன்மீக உணர்வு இல்லை. நாட்டுப்பற்று இல்லாதவனிடத்தில் ஆன்மா செயலற்றுக்கிடக்கிறது. எனவே உடல் வாழ்க்கை நிகழ்ந்தாலும் அவன் ஆன்ம வாழ்க்கையில் செத்தவனுகின்ருன். பிறகு அவன் உடலுக்கு வரும் அழிவு அவனுக்கு வரும் மற்றொரு மரணமாகின்றது. எனவே அவன் இரண்டு முறை இறந்தவனுகின்ருன்.

அவன் உடல் மறையும் பொழுது அவனுடைய உடல் மண்ணுக்குப் போகின்றது. கீழ்மையிலிருந்து தோன்றிய அவன் கீழ்மைக்கே போய்ச்சேருகின்ருன். அவன் மறைந்துபோவதைக் குறித்து யாரும் கவலைப்படுவதில்லை. அவன் மறைவுக்காக யாரும் அழுவதில்லை. யாரும்அவனுக்கு மரியாதைசெலுத்துவதில்லை. கவிஞர்கள் அவனைக் குறித்துப் பாடுவதும் இல்லை. இங்ஙனம் நாட்டுப்பற்று இல்லாதவனைக் குறித்து கவிஞர் வருந்திக் கூறியுள்ளார்.

மக்களிடையே தேசபக்தி இருப்பது அவசியமாகிறது தேசபக்தி தேசத்தை வளர்க்கும். தேசபக்தியுள்ளவனிடம் தேச நலன் முன்னிலையில் நிற்கும். தாய்நாட்டுப் பற்று மக்களிடம் வேண்டும். உடலைப் பெற்ற தாய் நமக்குத் தெய்வம் ஆகின்ருள். நாம் பிறந்த நாடு நமக்குத் தெய்வமாகின்றது. தாய்க்கு நிகர் தாய் நாடு ஆகின்றது. தாயைப் போற்றுகின்றவன் தாய் நாட்டையும் போற்றவேண்டும். தாயிடமிருந்து தாய்ப்பால் அருந்தி வளர்கின்ருேம். தாய்நாட்டிடமிருந்து தாய்நாட்டுப் பண்பை ஏற்று வளர்கின்ருேம். தாய்ப்பால் உடல் வளர்ச்சிக்கு உதவுவது போன்று தாய்நாட்டுப் பண்பு ஆன்ம வளர்ச்சிக்கு உதவுகிறது. நம் தாய் நாட்டின் பண்பு ஆன்மீகமாகும். எனவே நமக்கு ஆன்மீகப் பண்பு எளிதில் வந்து வாய்க்கும். ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் உடன் பிறந்த சகோதர சகோதரிகளாகிருர்கள். அங்ஙனம் ஒரே தாய் நாட்டில் பிறந்தவர்கள் சகோதரர்களும் சகோதரிகளும் ஆகிருர்கள். நாம் ஒரே நாட்டில் பிறந்த சகோதர சகோதரிகள் என்ற உணர்வுடன் வாழ்வோமானல் எந்தச் சக்தியும் நம்மை அசைத்துவிடமுடியாது.

தேசபக்தியுள்ளவன்தான் மக்களால் போற்றப்படுவான் என்றும், தேசபக்தி இல்லாதவன் மக்களால் இகழப்படுவான் என்றும் இந்தக் கவிஞர் கூறுகின்ருர். தேசபக்தி இல்லாதவன் வாழ்வதைக் காட்டிலும் இறப்பது மேலானது என்பது இக்கவிஞரின் கருத்தாகும்.

யக்ஞம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ம் ஆண்டு விருதுநகர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[124ஆம் பக்கத் தொடர்ச்சி]

உயிருடன் இருக்கின்ற பெற்றோர்கள், காலம் சென்ற முன்னோர்கள் ஆகியோர்களுக்குச் செய்யும் பணிவிடை பித்ரு யக்ஞமாகிறது. உயிருடன் இருக்கின்ற பெற்றோர்களுக்கு நாள்தோறும் நாம் செய்யும் பணிவிடை நல்ல ஆத்ம சாதனமாகிறது. பெற்றோர்களுக்கு வேலையாள் நியமித்துச் செய்கின்ற பணிவிடை பித்ரு யக்ஞமாகாது. நாம் சாப்பிடுவதற்குக் கூலியாள் ஒருவரை நியமிப்பதில்லை. அதை நாமே செய்தாகவேண்டும். அங்ஙனம் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய பணிவிடையை நாமே செய்யவேண்டும்.

காசியில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நூற்றாண்டு விழா கொண்டாடியபோது ஓர் அரிய நிகழ்ச்சி நடந்தது. காசியில் சங்கரர் பரம்பரையில் வந்த ஐந்து ஸ்தாபனங்களின் மண்டலேசுவரர்கள் இருக்கிறார்கள். பொதுப்பட அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கின்ற ஐதிகம் இல்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் நூற்றாண்டு விழாவில் அவ்வைந்து பேர்களும் ஒன்று கூடினார்கள். காசி சரித்திரத்திலேயே அதை ஓர் அலாதியான நிகழ்ச்சியாக எல்லாரும் கூறினார்கள். அவர்கள் கூடியபொழுது ஒரு தத்துவத்தை வெளியிட்டார்கள். குடும்பஸ்தர்கள் அனைவருக்கும் அது பெரிய பாடம் புகட்டுவதாக அமைந்திருந்தது. ஸ்ரீ ராமபிரானை ரகுவீர் என்ற பெயரால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் குடும்பத்தில் வழிபட்டு வந்தனர். இன்றைக்கும் அப்பழக்கம் கமார்புகூரில் இருந்து வருகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தந்தை க்ஷுதிராம் சட்டர்ஜி ராமேஸ்வரத்துக்குப் பாதயாத்திரையாக வந்து போனார். அதன் பின் கயைக்குச் சென்று பக்தி பூர்வமாகப் பிதுர்க்களுக்குப் பிண்டம் கொடுத்தார். அப்பொழுது பிதுர்க்கள் தரிசனம் தந்து ''உன் சிரத்தையைக் குறித்து நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். நீ படைத்த பிண்டத்தில் நாங்கள் திருப்தி அடைகின்றோம்" என்று அவரை ஆசீர்வதித்தனர். இந்நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்தார். மண்டலேசுவரர்கள் இதற்கு விளக்கம் கொடுத்ததாவது: ''குடும்பஸ்தன் ஒருவன் காலஞ்சென்ற பிதுர்க்களுக்குப் பக்தி பூர்வமாகப் பிண்டம் தந்தும், உயிரோடு இருப்பவர்களுக்குப் பணிவிடை செய்து அவர்களைத் திருப்திப்படுத்தியும் பிதுர் யக்ஞத்தை முறையாகச் செய்வானாகில் அவனுக்குச் சத்புத்திரன் வாய்ப்பான் என்பது சாஸ்திரக் கோட்பாடு. க்ஷுதிராம் சட்டர்ஜி இதைப் பூரணமாக நிறைவேற்றினார். ஆகையால் அவருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்தார்." இல்வாழ்வான் தவமிருந்து உலகுக்குத் தவப்புதல்வனைத் தருவது அவன் உலகுக்குத் தருகின்ற கொடையாகும். இன்றைக்கு மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாடு என்னும் அசுரத்தனமான வழி முறையைக் கையாளுகிறார்கள். ஒன்றுக்கும் உதவாத கயவர் கூட்டம்தான் இன்றைக்குப் பிறப்பெடுத்து வருகிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பரிகாசம் பண்ணும் பாங்கில் ஒருவர் பகர்ந்ததாவது: ''ரிஷீகேசத்தில் சமுதாயத்துக்குத் தலைச்சுமையாக ஒரு லட்சம் பேர் சந்நியாசிகளாக இருந்து வருகிறார்கள். இவர்களால் உலகுக்கு ஒரு பயனும இல்லை." ஸ்ரீ ராமகிருஷ்ணர் அமைதியாக அதற்குக்கூறிய பதிலாவது: "சந்நியாசிகள் சமுதாயத்திற்குச் தலைச்சுமையாக இருப்பதற்கு உன் போன்ற கிருஹஸ்தர்கள்தாம் பொறுப்பாளிகளாவார்கள்."

கிருஹஸ்தர்: "கிருஹஸ்தர்களாகிய நாங்கள் அதற்கு எப்படிப் பொறுப்பாளிகளாவோம்?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர்: ''அவர்கள் ஆகாயத்திலிருந்து விழுந்து விடவில்லை. ஒன்றுக்கும் உதவாத அவர்களைக் கிருஹஸ்தர்களாகிய நீங்கள் தாம் பெற்றெடுத்திருக்கிறீர்கள். உங்களை யார் அத்தகையவர்களைப் பெற்றெடுக்கும்படி கூறினார்கள்? அது உங்களுடைய குற்றமாகும்.'' இதைக் கேட்டவர் சிந்திததுப் பார்த்துவிட்டுச் சும்மா இருந்து விட்டார்.

குடுமபஸ்தர்கள் தங்களைப் பக்குவப்படுத்துவதற்கேற்பத் தங்களுக்குச் சத்புத்திரன்வாய்ப்

பான் என்ற தத்துவத்தை அறியார்கள். "மேலைத் தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்" என்பது கோட்பாடு. செல்வத்துள் மகப்பேறு என்னும் செல்வம் சிறப்பானது. தவத்தின் விளைவாக வாய்க்கின்ற மகப்பேறு தான் சிறப்பாக இருக்கும். இவ்வுண்மையை குடும்பஸ்தர்கள் அறிந்திருப்பதவசியம்.

பிள்ளைகள் பெற்றோர்களுக்குத் தினசரி காயத்தால் பணிவிடை செய்வது அவசியம். இது நடைமுறையிலிருந்து மறைந்துகொண்டு வருகிறது. இப்பண்பாட்டை ஓரளவாவது புதுப்பிப்பதற்குத் திருப்பராய்த்துறை குரு குலத்தில் பயிலும் மாணக்கர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. வித்யாவனக் குருகுலப் பள்ளி மாணவர்கள் விடுமுறையில் வீட்டுக்குப் போனதும் பெற்றோர்களைப் பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்து வீழ்ந்து வணங்கவேண்டும். அப்படி வீட்டில் அவன் செய்தான் என்பதற்குப் பெற்றோர்களிடமிருந்து அவன் கைவசம் கொடுத்தனுப்பிய நாட்குறிப்பில் கையெழுத்து வாங்கி வரவேண்டும். பெற்றோர்களை வணங்குவதில் உள்ள மனக் கஷ்டத்தை மாணவன் ஒருவன் கூறியதாவது: "தபோவனத்தில் பெரியவர்களுக்கு வணக்கம் பண்ணுவதில் மனதுக்கு மகிழ்ச்சியாகவே இருக்கிறது. வீட்டில் பெற்றோர்களை வீழ்ந்து வணங்குவதற்கு வெட்கமாக இருக்கிறது." அம்மாணவன் அவ்வாறு கூறியதற்குக் காரணம் பெற்றோர்களை வணங்குவதற்கு வீட்டில் பயிற்சி தராததேயாகும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு இப்பயிற்சி தரவேண்டும் என்று எண்ணிப் பார்ப்பதில்லை. அப்பழக்கம் மறைந்து வருவதால் பிள்ளைகளுக்குப் பெற்றோர்களிடம் பக்தி விசுவாசம் இருப்பதில்லை.

மேல் நாட்டிலிருந்து வந்திருந்த அம்மையார் ஒருவருக்குக் கல்கத்தாவைச் சுற்றிக்காட்டும்படி ஓர் அன்பரிடம் விவேகானந்தர் கூறினர். ஒருநாள் முழுவதும் அந்த அன்பர் அந்த அம்மையாருக்குக் கல்கத்தா முழுவதையும் சுற்றிக் காட்டிக்கொண்டிருந்தார். மாலை ஏழு மணி அளவில் அவ் அம்மையார் அவ் அன்பரைக் கேட்டதாவது: "இன்று முழுவதும் என்னுடன் இருந்துவிட்டாயே. உன் மனைவி உன்னைக் கோபித்துக்கொள்ள மாட்டாளா?" "அவள் என்னைக் கோபித்துக்கொள்ளமாட்டாள்" என்று அவ் அன்பர் கூறினர். "வீட்டுக்குப் போனதும் நீ என்ன செய்வாய்?' என்று அம்மையார் கேட்டார். "இன்றைக்கு நிகழ்ந்ததை எல்லாம் என் தாயிடம் கூறுவேன்' என்றார். "அதன் பிறகு நீ என்ன செய்வாய்?" என்று அவ் அம்மையார் கேட்டார். "நான் சாப்பிடப்போவேன். எனக்குச் சாப்பாடு போடுவதற்காக என் மனைவி காத்துக்கொண்டிருப்பாள். நான் சாப்பிட்டபின் அவள் சாப்பிடுவாள். ஏன் இவ்வளவு நேரமாகி விட்டது? என்று மனைவி கோபித்துக் கொள்ளமாட்டாள். அவள் என்னிடம் ஒன்றும் கேட்கவும் மாட்டாள். நானும் அவளிடம் ஒன்றும் சொல்லமாட்டேன்" என்றார். "அவளிடம் மன்னிப்பாவது கேட்பாயா?" என்று அவ்வம்மையார் கேட்டார். "அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியது அவசியமில்லை. நானும் மன்னிப்புக் கேட்கமாட்டேன்" என்றார். "உன் மனைவிக்கு வாழ்க்கையில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளையெல்லாம் யார் கூறுவார்கள்?" என்று அவ்வம்மையார் கேட்டார். "அவளுடைய மகன் தன் அனுபவங்களையெல்லாம் அவளுக்குச் சொல்லுவான்" என்று அவ்வன்பர் கூறினர். "நீ இரவு கால தாமதமாகப் போவதற்கு அவளிடம் ஏன் மன்னிப்புக் கேட்கக்கூடாது?" என்று அம்மையார் கேட்டார். "நான் வீண் காலம் போக்கிக்கொண்டிருக்கவில்லை. நான் மன்னிப்புக் கேட்டால் அவள் அதற்கு ஆட்சேபணை செய்வாள்" என்றார் அந்த அன்பர். இதைக்கேட்ட அவ்வம்மையார் திகைத்துப் போனர். "எங்கள் நாட்டில் மன்னிப்புக் கேட்பது வழக்கம். அதை அனுசரித்து உன்னை நான் கேள்வி கேட்டேன்" என்று அந்த அம்மையார் கூறினர்.

அவ்வன்பர் நடந்துகொண்டது நம் தேசியப் பண்பை விளக்குகிறது. இப்பண்பு இப்பொழுது மறைந்துகொண்டுவருகிறது. இக்காலத்துப் பிள்ளைகள் இப்படி நடப்பதில்லை. இது நல்ல பண்பாட்டுக்கு அறிகுறியன்று. வங்காளத்தில் பெற்றோரை வணங்கும் பழக்கம் சிலரிடத்தில் இன்னும் இருந்து வருகிறது. ஆனல் இங்கு நாம் அதை அடியோடு மறந்து விட்டோம். அப்பழக்கத்தை இனிப் புதுப்

பிக்க வேண்டும். காலமான பெற்றோர்கள் எந்த உலகில் எந்த நிலையில் இருந்தாலும் இன்புற்றிருப்பார்களாக! என்று சிரார்த்த நாளில் அவர்களைக் குறித்து எண்ணுவது குடும்பஸ்தர்களுடைய கடமையாகும். உயிருடன் இருக்கின்ற பெற்றோர்களுக்குத் தினசரி சிறிது நேரமாவது பணிவிடை செய்யவேண்டும். இங்ஙனம் பிதுர்யக்ஞம் செய்பவர்களுக்குச் சத்புத்திரர்கள், புத்திரிகள் வாய்ப்பார்கள். பிதுர்யக்ஞத்திலிருந்து பிசகுகின்ற அளவு சமுதாயம் கீழ்நிலைக்குப் போய்விடும்.

அடுத்து நரயக்ஞம் அமைகின்றது. மனிதன் மனிதனுக்குச் சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கின்றான். இது வாழ்க்கையைப் பற்றிய உண்மையாகும். எம்மனிதனும் உலகத்தில் தனியாக வாழ்ந்திருக்க முடியாது. சிலர் பல வசதிகளோடு உலகில் பிறந்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை தற்செயலாக அவர்களுக்கு வந்து அமைவது அன்று. மற்றவர்கள் செய்த தியாகத்தின் பயனை ஒரு சிலர் அனுபவிக்கின்றனர். சிறுவர்களுக்குக் களிக்கூடம் (Nursery School) நடத்துகின்றனர். யாரோ செய்த யாகத்தின் விளைவாக நர்சரிப்பள்ளி அமைந்துள்ளது. சுயநலமற்றுச் செய்யப்படுபவைகளெல்லாம் யக்ஞங்கள் ஆகின்றன. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி, சத்திரம், அன்னசமாஜம் ஆகியவைகளெல்லாம் யாகத்தின் விளைவாக அமைந்தவைகள் ஆகும். அவற்றைப் பயன்படுத்திக் கொள்பவன் பிறருக்குப் பயன்படாமல் போவானாகில் அவன் திருடன் ஆகின்றான் என்று கீதை பகர்கின்றது.

நரயக்ஞம் என்னும் யாகம் செய்வதற்கு மனிதன் கடமைப்பட்டிருக்கின்றான். சமுதாயத்துக்கு யாவரும் பயன்படலாம். குருடன், செவிடன், ஊமை போன்ற அங்கஹீனர்களும் சமுதாயத்துக்குப் பயன்படலாம். அவர்கள் தங்களைச் சமுதாயத்திற்குப் பயன்படாதவர்கள் என்று நினைப்பார்களானால் அது தவறு. மனிதன் தான் எந்த நிலையில் இருந்தாலும் தன்னுடைய வாழ்வைப் பிறருக்குப் பயன்படுத்தலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு நாக்பூரில் ஒரு விதவையைச் சந்திக்க நேரிட்டது. அந்த அம்மையார் பெயர் கமலாம்பாள். அவர் பால்யத்திலேயே விதவையாகிவிட்டார். அவர் விதவையான பிறகு கல்வி கற்றுப் பல கிளைகளோடு கூடிய பிரசவ ஆஸ்பத்திரியை நடத்திக்கொண்டிருந்தார். ஆஸ்பத்திரியைக் காண்பதற்கும், அவ்வம்மையாரைப் பார்ப்பதற்கும் அவ்வம்மையாருடைய சகோதரர் அழைத்துச் சென்றார். அங்கு நொண்டி ஒருவன் டெலிபோன் ஆபரேட்டராக மகிழ்ச்சியுடன் வேலை செய்துகொண்டிருந்ததைக் கண்டோம். 'என் தலைவிதி, நான் நொண்டியாகப் போய்விட்டேன்' என்ற உணர்ச்சி அவனிடம் இல்லை. மற்ற அங்கஹீனர்களையும் அவ்வம்மையார் தக்க வேலை கொடுத்து ஆதரித்து வந்ததை நாங்கள் அங்குக் கண்டோம். சமுதாயத்துக்குத் தான் எந்தவிதத்திலாவது தொண்டு செய்யவேண்டும் என்கிற எண்ணம் வந்துவிட்டால் வழி தானாகவே அமையும். அவ்வெண்ணம் உறுதியானதாக இருந்தால் விரிவடைந்து கொண்டே போகும்.

நம்மிடத்து அமைந்துள்ள சிறப்பை எடுத்து மற்றவர்களுக்கு வழங்காவிட்டால் அச்சிறப்பு நம்மை விட்டுப் போய்விடும். சிவனுக்கு அமைந்த நாமங்களுள் யக்ஞ ரூபியாக இருக்கிறார் என்று பொருள்படுகின்ற நாமம் ஒன்று உண்டு. மலர் நம் கண்ணுக்கும், மூக்குக்கும் இனிமை தருவதோடு தேனீக்குத் தேனையும் கொடுத்துத் தன் வாழ்வைப் பூர்த்திசெய்கிறது. கனி மற்ற உயிர்களுக்கு உணவாகவும் தன் இனம் விருத்தியாக விதையாகவும் பயன்படுகிறது. ஸ்தாவர ஜங்கமத்தில் எதை ஆராய்ந்து பார்த்தாலும் மற்ற உயிர்களுக்கு ஏதோ ஒருவிதத்தில் பயன்படுவதாக இருந்து அது தன்னுடைய வாழ்வைப் பூர்த்தி செய்கிறது. ஜீவர்களுக்கிடையில் உச்ச நிலைக்கு வந்திருக்கின்ற மனிதன் தன்னுடைய ஜீவிதத்தைப் பிறருக்குப் பயன்படுத்தாது வாழ்வானாகில் அவனிடம் சிரேயஸ் வளராது. அவன் இறந்தவனுக்கு ஒப்பாவான். விவேகானந்த சுவாமிகள் பகர்ந்திருப்பதாவது: "They alone live who live for others; The others are more dead than alive." பிறருக்காக வாழ்பவர்களே வாழ்பவர்கள். மற்றவர்கள் நடமாடும் பிணத்துக்கு நிகராவார்கள். இது யக்ஞ தத்துவமாகும். (தொடரும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

அன்புமிக்கவனும், பிரியமானவனும், தன் போதனைகளைக் கேட்பதில் பெருவிருப்பம் உடையவனும் ஆகிய பிரம்மதேவன் என் ஆண்டவனுக்கு முன்னால் பணிவுடனும் அடக்கத்துடனும் வந்தபொழுது பரந்தாமனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. பேரன்புடன் ஆண்டவனின் பாதங்களைப் பிரம்மதேவர் வழிபட்டார். பிரசன்னவதனத்துடனும், மலர்ந்த கண்களுடனும் அன்புடனும் என் ஆண்டவன் பிரம்மதேவனின் கரங்களைப் பற்றிக்கொண்டு இவ்விஷயங்களை அவருக்கு உபதேசித்தருளினார். சதுர் வேதங்களையும் தன்னுள் அடக்கி வைத்திருப்பவனே, இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்க விருப்பம் கொண்டவனாய்த் தபஸில் ஈடுபட்டிருக்கிறாய். உனது பேரன்பு எனக்குப் பரம பிரீதியை உண்டாக்குகிறது. அரைகுறை பக்தி செய்பவர்களிடத்து எனது மனதே செல்வதில்லை, உனக்கு எல்லா மங்களங்களும் உண்டாகட்டும். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள். பிரம்மதேவனே! வாழ்வில் மிகப் பெரியபேறு, சிரேயஸ்—மிக மேலான நன்மை ஆண்டவனை—என்னை அடைதலே ஆகும். உனக்கு எல்லா நலன்களையும் வழங்கவல்லவன் நானே. உனது குறியும் நெறியும் நானே. உனக்குப் பரமபதம் ஆகிய வைகுண்டத்தின் தர்சனம் கிடைத்தது உன் தபஸின் விளைவே ஆகும். தப: என்ற பதம் இரண்டு முறை ஒலித்ததைக் கேட்டு (ஆழ்ந்து தியானம் செய்; தவத்தில் ஈடுபடு என்று பொருள்.) நீ உடனே தவத்தில் தியானத்தில் ஈடுபட்டாய். ஏகாந்தத்தில் இருந்த உனக்கு அச்சொற்கள் எங்கிருந்து வந்தன, யார் சொன்னது என்பது தெரியவில்லை. சிருஷ்டிக்க வேண்டும் என்கிற ஆவலோடு இருந்த உனக்கு நான் தப: என்று கட்டளையிட்டேன். குற்றமற்றவனே! தபஸ் எனது சொரூபம். தியானிக்கப்பட வேண்டிய பொருள் நானே, தபஸின் குறி நானே. தபஸினால் தான் முத்தொழில்களும் நடைபெறுகின்றன. தவமே சிருஷ்டிக்கு மூலம், சக்தி ஆகும்.

பிரம்மதேவர் சொன்னது: என் ஆண்டவனே! பிரபோ வணக்கத்துக்கு உரிய, சரண் அடைவதற்குரிய ஒரே பொருள் நீரே. இப்பிரபஞ்சத்தைத் தாங்குபவர் நீரே. இப்பிரபஞ்சத்துக்கு ஆதாரமாய் இருப்பவர் நீரே, எல்லா ஜீவர்களின் புத்தியில் உறைபவர் நீரே, அந்தராத்மாவாக மனச்சாட்சியாக இருப்பவர் நீரே. இப்பிரபஞ்சத்தில் யாங்கணும் ஊடுருவி இருப்பவரும், நீக்கமற நிறைந்திருப்பவரும் நீரே. எல்லாவற்றின் உயிராகவும், அறிவாகவும் உணர்வாகவும் இருப்பவர் நீரே. என் ஆண்டவனே! உமக்குத் தெரியாதது, விளங்காதது இப்பிரபஞ்சத்தில் ஒன்று உண்டா? என் உள்ளக்கிடக்கையைத் தேவரீர் அறிந்துகொண்டு, அருள் கூர்ந்து அதற்குச் செய்ய வேண்டியதைக் கட்டளையிட்டருளினீர்கள். ஆனால் என் ஆண்டவனே! பிரபோ! என் மனதைப் புறத்தே, பிரவிருத்தியில், சிருஷ்டியில் திருப்பி விட்டேனே, எண்ணம் கொண்டேனே! உம்மை அறிதலை விடுத்து உம்மில் கலந்துவிடுதலை விடுத்துச் சிருஷ்டியில் மனம் கொண்டேனே! ஆயினும் என் ஆண்டவனே! அதுவும் உன்தன் விருப்பமன்றோ. இப்பிரபஞ்சம் உமது ஸ்தூல சரீரம் அன்றோ. வடிவமற்ற பொருள் ஸ்தூல, சூக்ஷ்ம வடிவெடுத்து இப்பிரபஞ்சமாகவும் அதன் உயிரோட்டமாகவும் கலையாகவும் அறிவாகவும் விதவிதமான அழகாகவும், சம்பவங்களாகவும், சீலமாகவும், தியாகமாகவும், அதன் சரித்திரமாகவும் விளங்கிக்கொண்டிருக்கிறது. அதை அறிந்து கொள்ளுதல் அதில் உன் கையில் கருவியாக இருந்துகொண்டு உமக்குச் சேவை, பணிவிடை செய்தல் உன் கிருத்தியத்தை நிறைவேற்றுவது என்கடன் அன்றோ. இப்பிரபஞ்சத்தில் நீர் ஊடுருவி நிற்கும் கோலத்தை, உமது அகண்டாகார தன்மையை நான் மறவாது உன் கிருத்தியத்தைச் செய்ய அருள் புரியுங்கள். சிலந்திப் பூச்சி தனது சரீரத்திலிருந்து உண்டாக்கிய வலையில் தானே வாழ்வதுபோன்று தாங்களேபிரம்மதேவன்வடிவெடுத்துச் சிருஷ்டிக்கின்றீர்கள். என் செயல் என்பது ஒன்றும் இல்லை. அனைத்தும் உம் செயலே. இதை மறவாமல் யாண்டும் நினை

வில் கொண்டு நான் இடையருது உம் செயல் புரிய அருள் புரியுங்கள். உமது கட்டளையை நான் நிறைவேற்றுகிறேன். தேவரீர் அருளால் அகங்கார மமகாரம் என்னை அணுகாதிருக் கட்டும். நண்பன் ஒருவன் தன் அன்புக்குரிய நண்பனின் கரங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு குசலம் விசாரிப்பது போன்று தேவரீர் என்னைத் தங்களுக்குச் சமமானவன் போன்று அன்பு பாராட்டுகின்றீர். என் ஆண்டவனே! தேவரீர் என் தந்தை ஆகின் றீர்கள். தங்களால் வழங்கப்பட்ட சக்தி, அறிவு, அதிகாரத்தைக் கொண்டு தங்கள் கட்டளையை நிறைவேற்றி வருவேன். என் ஆண்டவனே! மனிதனைக் கீழ்மையுறச் செய் கிறவைகளில் தலையாயது அகங்கார மமகாரம் ஆகும். யான் எனது என்பதில்லை, யாண்டும் நீ ஒருவனே உள்ளாய். யாவும் உன் உடை மையே. யாவும் நீயே.

பகவான் பகர்ந்தது:—பிரம்மதேவனே! என் அன்புக்குரியவனே, பக்தியும் ஞானமும் அடை தல் மிகவும் கடினம், அதில் நிறைநிலை அடை தல் மிகவும் அருமை. அதனல் என்னைப் பற்றிய விஷயங்கள் மறை எனப்படுகின்றன. மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது பொருள். மாயையின் வசப்பட்டிருப்பதால் ஆத்ம ஞானம் எளிதில் விளங்குவதில்லை, அனுஷ்டானத்துக்கு வருவதில்லை. ஆயினும் இறை தத்துவங்களையும் சாதனமார்க்கங்களை யும் உனக்குச் சொல்கிறேன். மிக்க கவனத் துடன், ஒருமை மனதுடன் கேட்பாயாக. எனது சொரூப லக்ஷணம், எனது விபூதிகள், வடிவம், அனந்த கல்யாண குணங்கள் எனது அருட் செயல்கள், அருட்கூத்து இவைகளை யெல்லாம் நீ விளங்கிக்கொள்வாய். சிருஷ் டிக்கு முன்பு நான் இருந்தேன். சிருஷ்டிக்கு முன்பு இருந்த பொருள் நான் ஒருவனே. ஸ்தூல, சூக்ஷ்ம வடிவம், பொருள் ஏதுமே இல்லை. பஞ்சபூதங்களும் இல்லை. பிரளயத் தில் அனைத்தும் ஒடுங்கிய பிறகு எஞ்சியிருப் பவன் நானே. இப்பிரபஞ்சத்தில் நீ காண் கிற சகல வஸ்துக்களும் என்னிடத்திருந்து வந்தவைகள், நானே அப்பொருள்களாக வடி வெடுத்தேன், அவைகள் எனது பல்வேறு தோற்றங்கள் ஆகும். அவைகள் பிரளயத் தில் ஒடுங்கிய பிறகு, அவைகள் தோன்ரு நிலைக்குப் போனதும் எஞ்சியிருப்பவன் நானே, எனக்கு முன்னவர் யாருமில்லை, நான் ஏகன், எனக்கு அன்னியமாக இரண்டாவது பொருள் இல்லை. அனைத்தும் நானே. (முயல் கொம்பு, இரண்டு சந்திரர்கள் ஆகிய வாக்கி யங்களில் பொருள் ஒன்றுமில்லை. ஏனென் ருல் முயலுக்குக் கொம்பு இல்லை. இரண்டு சந்திரர்களை நாம் பார்த்தது இல்லை. உண்மை இல்லாவிட்டாலும் இவ்வாக்கியங்கள் நடை முறையில் உள்ளன. அதேபோல் உண்மை யில் சில விஷயங்கள் நம் கண்ணுக்கும் தெரிவ தில்லை. அவை வழக்கிலும் இல்லை. ஸ்தூல கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் சான்ருேர் சில விஷயங்களை ஞானக்கண்ணல் பார்த்துச் சொல்லியுள்ளார்கள். ராகு என்கிற கிரஹம் உண்மையில் இருந்தும் அது கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆகவே பிரம்மதேவனே! இவை எல்லாம் என் மாயையின் செயல்கள் என் பதை அறிந்துகொள்வாயாக. உள்ளதை நம் மால் நன்கு பார்க்க, உணர முடியாது. இல்லா தது இருப்பது போன்று தோன்றும். மங்கிய வெளிச்சத்தில் கயிறு பாம்பாகத் தோன்று கிறது. கிளிஞ்சலில் வெள்ளி தோன்றும், கானலில் நீர் தோன்றும். ஆகவே குழந்தாய்! உண்மையில் உள்ளவன் நான் ஒருவனே. மற்ற எல்லாம் வெறும் தோற்றம் மாத்திரமே. பிரக் ஞானம் என்கிற திரையில் பிரபஞ்சம் என்கிற காட்சி தோன்றிக் கொண்டிருக்கிறது. திரை தான் உண்மை, காட்சிகள் வெறும் தோற் றமே. பஞ்சபூதங்களால் எல்லா உயிர்களும், பொருள்களும் ஆகியிருக்கின்றன. ஆனல் அவைகளின் மாற்று வடிவங்களே, மாறி அமைந்த பொருள்களே தென்படுகின்றன அன்றிப் பஞ்சபூதங்களின் நேர் ஸ்தூல வடிவம் தென்படுவதில்லை. அதேபோன்று இவை யாவற்றுக்கும் மூலம், காரணப் பொருளாக நான் இருந்தும் நான் தென்படுவதில்லை. நான் இன்றி அவைகளுக்கு இருப்பு இல்லை. நான் இன்றி அவைகள் தோன்றமாட்டா; இருக்க மாட்டா. அவை ஒன்றும் நான் இல்லை. ஆனல் நான் இன்றி அவை இல்லை. ஞானிகள், ஆத்ம சாதகர்கள் இவ்வுண்மைகளை எல்லாம் விசா ரித்து அறிகிருர்கள். சுத்த மனது இந்த நிய

மனங்களை, ஏற்பாடுகளைத் தானேஉணர்கிறது, பார்க்கிறது. இப்பிரபஞ்சம் காரன காரிய சொருபமாக, சங்கோசம்—விகாசம் மயமாக (சருங்குதல்-விரிதல்) அன்வயம்—வியதிரேகம் (ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாததுபோல் தோன்றுகிறது. தனித்தனியானவைபோன்று தோன்றுகிறது. ஆராய்ந்தால் அனைத்தும் ஒரே குடும்பம், ஒன்றிலிருந்து தோன்றியவை என்பது விளங்கும்) ரூபமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. நான் ஒருவனே கர்த்தா. நான் ஆட்டுவிக்கிற பிரகாரம் பிரபஞ்சம் இயங்குகிறது. எனையன்றி ஓரணுவும் அசையாது. நான் தூணிலும் இருக்கிறேன்; துரும்பிலும் இருக்கிறேன். பிரம்மதேவனே! இவ்வுண்மைகளை எல்லாம் அறிந்துகொண்ட உனக்கு அகங்காரம் மமகாரம் தோன்றாது. இடையறாத கர்மத்துக்கிடையில் நான் சிருஷ்டிக்கிறேன் என்கிற எண்ணமே உனக்கு வராது.

சுகதேவர் சொன்னார்: அன்பான அரசனே! ஆதி அந்தமற்ற என் பிரபு ஸ்ரீஹரி, இந்த ஜகத்துக்கு நாதனனவர் பிரம்மதேவரிடம் இம்மொழிகளைப் பகர்ந்துவிட்டு மறைந்துவிட்டார். பிரம்மதேவர் கைகளைக் கூப்பி என் ஆண்டவனை வணங்கினார். அதன் பிறகு முன்போலவே சிருஷ்டி கிருத்தியத்தில் ஈடுபட்டார். அன்பான அரசனே! சிருஷ்டி பூர்த்தியான பிறகு தான் சிருஷ்டித்த சகல ஜீவர்களின் நன்மையில் கருத்துடையவராய், அதோடு தன் வாழ்வு பூரணமடைய வேண்டும் என்கிற அவாவினால் தூண்டப்பட்டவராய்த் தவத்தில் ஈடுபட்டார். தவநெறிகளையெல்லாம் பின்பற்றி நிறைந்த புலனடக்கம் உடையவராய் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டார். அதன் பிறகு பிரம்ம புத்திரர்களில் உத்தமமானவரும் தந்தையால் மிகவும் நேசிக்கப்பட்டவருமான நாரதர் ஆண்டவனைப்பற்றி அறிந்துகொள்ளக்கடவுள் தத்துவங்களை, தேவ மாயையைப் பற்றித் தன் தந்தையாரிடம் தெரிந்துகொள்ள வேண்டி அவருக்கு அன்புடன் பணிவிடை பண்ணினார். பணிவு, அடக்கம், நற்குணங்கள் நிறைந்தவராக நாரதர் இருந்தார். இதன் மூலம் எப்போதும் பரம பக்தியுடைய நாரதர் பேரில் பிரம்மாவுக்குப் பரமபிரீதி உண்டாயிற்று. தந்தையார் திருப்தியடைந்துள்ளதைப் பார்த்து நாரதரும் நீ என்னிடம் கேட்ட அதே கேள்விகளைப் பிரம்மாவிடம் கேட்டார். தன் மகனிடத்தில் மிகவும் அன்பும் மகிழ்ச்சியும் அடைந்தவராகத் தாம் பகவானிடத்தில் கேட்ட பாகவத புராணத்தைப் பிரம்மா சொன்னார். அந்தப் புராணத்தில் பத்து அங்கங்கள் உள்ளன. நாரதர் இந்தப் பாகவத புராணத்தை எனது அருள் தந்தையாருக்குச் சொன்னார். என் தெய்வத் தந்தையார் எனக்கு உபதேசித்த வண்ணம் உனக்குச் சொல்கிறேன். நீ மிகவும் கவனமாகக்கேட்பாயாக. உன் சந்தேகங்களுக்கெல்லாம் அதில் விடை உள்ளது.

ஸ்கந்தம் 2. அத்தியாயம் 10.

சுகதேவர் சொன்னார்: இந்தப் பாகவத புராணத்தில்பத்துவிஷயங்களைப்பற்றி விமர்சிக்கப் பட்டிருக்கின்றன, ஆராயப்பட்டிருக்கின்றன. அவையாவன: 1. சர்க்கம்(பிரம்மாவைத் தோற்றுவித்து அவருக்குச் சிருஷ்டிக்க அதிகாரமும் ஞானமும் தந்தருளிய பரம் பொருளின் முதல் சிருஷ்டி.) 2. விசர்க்கம், (அதன் பிறகு பிரம்மதேவர் செய்கிற சிருஷ்டி.) 3. ஸ்தானம் (நிலைபேறு, நிலை, படித்தரம், அந்தஸ்து) 4 போஷணம்(ஸ்திதி) 5. உத்தி. (செயலில் கர்மத்தில் பிரவிருத்தி) 6. மன்வந்தரம், (ரிஷிகள், உத்தமர்கள், சான்றோர்களின் அமைதியான, அடக்கமான, பக்தியான வாழ்க்கைமுறை) 7. ஈசானுக்தம் (கடவுளைப்பற்றியும் அவருடைய பக்தர்களைப் பற்றியும் சம்பாஷித்தல், ஹரிகதாகாலக்ஷேபம்.) 8. நிரோதம் (ஆழ்தல் ஆழ்வாராதல், மூழ்குதல்) 9. முக்தி (ஜன்மசாபல்யம்,) பந்த விமோசனம், அனைத்துத் தளைகளினின்றும் விடுபடுதல்.) 10. ஆச்ரயம் (அனைத்துக்கும் ஆதாரமாக,இருப்பிடமாக,தாங்குமிடமாக இருப்பது. முதல் ஒன்பது விஷயங்களும் பத்தாவது விஷயமாகிய முடிந்த உண்மையாகிய ஆச்ரயம்—பிரம்மமே அனைத்தும் என்கிற உண்மையைத் தெளிவாக விளக்குதல், எடுத்துக் காட்டுதல் பொருட்டே விளக்கப்படுகிறது என ஞானிகள் சொல்கிறார்கள். இவ்வுண்மையை இப்புராண வாசகங்களும், அர்த்தங்களும் உறுதிப்படுத்துகின்றன. ஸ்தூல, சூக்ஷ்ம பூதங்கள், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், அந்தக்கரணம் (மனது, அகங்

காரம்) மஹத்தத்துவம் (விஸ்வத்தின், விராட் புருஷனின் அறிவு) ஆகியவைகளின் சிருஷ்டி, தோற்றம், இத்தோற்றத்துக்குக் காரணமாகிய முக்குணசமநிலை பாதிப்பு, சலனம், இவைகள் என் ஆண்டவனின் சங்கல்பத்தால் இச்சா சக்தியால் ஏற்பட்டன. இதுவே சர்க்கம் எனப்படுகிறது. அதன் பிறகு என் ஆண்டவ னிடத்திருந்து தோன்றி வந்த பிரம்மதேவர் உயிருள்ள சேதனப்பொருள்களையும் உயிரற்ற ஜடப் பொருள்களையும் தோற்றுவித்தது விசர்க்கம் எனப்படுகிறது. கோளங்களும் உயிர்களும் தங்கள் ஸ்தானத்தை, எல்லையை, வரம்பை ஒருநாளும் மீறுவதில்லை, மாறுவ தில்லை, மாற்றிக்கொள்ள முடிவதில்லை. இந்தக் கட்டுக்கு அடங்கின தன்மையை ஆளும் திற மையை ஸ்தானம் என்கிற பெயரால் விளக்கு கிறார்கள். தன் படைப்பின்பால், ஜீவர்களிடம் பக்தர்களிடம் என் ஆண்டவன் கொண்டுள்ள அன்பு அருள் கருணை போஷணம் எனப்படு கிறது. ஒவ்வோர் உயிரும் ஒருசுபாவம், ஆவல், விருப்பம்கொண்டதாக இருக்கிறது. அதனால் அவைகள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்பி முயல்கின்றன, ஓயாது வினையாற்றுகின்றன, செயல்படுகின்றன. அத னால் அவைகளுக்கு வினைப்பயன்கள் உண்டா கின்றன. அது முடிவில்லாத பிறப்பு இறப்பில் பிரபஞ்ச வாழ்வில் இருததி வைககின்றன. இத்திருவிளையாடல், அலகிலா விளையாட்டு என் ஆண்டவனுடைய உததி, ஏற்பாடு, திட் டம், தந்திரம் எனப்படுகிறது. பல்வேறு மன்வந்தரங்களில் ஆண்டு வந்த உத்தமமான சீலமான மனுக்கள் வாழ்ந்த உயர்வான, பண்பு மிக்க வாழ்க்கைக்கு மன்வந்தரம் என்று பெயர். என் பிரபு ஹரியின் பல அவதாரங் களின் வரலாறுகள், அவரிடத்துப் பக்தி செய்த உத்தம ஆழ்வார்கள், நாயனமார்கள், பக்தர் களின் உயர்ந்த சரித்திரங்கள், அத்துடன் பிணைக்கப்பட்டுள்ள கதைகள் இவைகளை ஈசா னுக்தம் அல்லது ஈசகதைகள் என்கிறார்கள். புழுதியிலும் சேற்றிலும் விளையாடி அழுக்குப் படிந்த மேனியுடைய குழந்தையைத் தாய் அன் புடன் சுத்தப்படுத்திக் கட்டி அணைத்து ஆதரவு காட்டுவது போன்று பிரபஞ்ச வாழ்வினின்று ஜீவனை மீட்டுஎடுத்துத் தன் அருள்வட்டத்தில, தன்னுள் என் ஆண்டவன் ஜீவனை ஐக்கியப் படுத்திக்கொள்கிறான்; ஜீவன் பிறவா நிலை அடைகிறான். இதை நிரோதம் என்கிறார்கள். ஜீவன் தானே கற்பித்துக்கொண்ட கர்த்ருத் வம், அகங்காரம், மமகாரம் இவைகளை உண் மையை உணர்ந்து உதறி எறியும்போது அது ஜீவ போதத்திலிருந்து விடுதலைபெறு கிறது. இதை முக்தி என்கிறார்கள். எந்தப் பொருளிடத்திலிருந்து யாரிடத்திலிருந்து இவை யாவும் தோன்றி வந்தனவோ, நிலைபெற்றிருக்கின்றனவோ, பிறகு ஒடுங்கு கின்றனவோ அப் பேரறிவுப் பொருள், சத் பொருள், களிப்பருளும் களிப்பு, பிரம்மம், ஆத்மா, பரமாத்மா, என்று அழைக்கப்படு கிறார். இவ்வுண்மைகளை அறிதல் அதில் ஒன்றிவிடுதல் மானுட வாழ்வின் உயர்லக்ஷியம் ஆகும். எது அத்யாத்மிகமாக உள்ளதோ (பரம்பொருள்) அதுவே அதிதெய்வமாகவும் (தேவ தேவி சொருபங்கள்) ஆதிபௌதிகமாக வும் (பஞ்சபூதங்கள், அதன் சேர்க்கையால் உண்டான சேதன அசேதனப் பொருள்கள்) ஆகியிருக்கிறது. மூன்று பொருள்களும் ஒன்றே. ஒன்றே மூன்றாகத் தோன்றிக் கொண்டிருக் கிறது. மூன்றும் ஒன்றினால் ஆக்கப்பட்டதே. எந்த ஆதமா இந்திரியங்களின் வழியாக ஜீவ சொருபத்தில் இருந்துகொண்டு பார்க்கிறதோ, கேட்கிறதோ அதே ஆதமாவே இந்திரிய தேவதைகளினுள்ளும், பஞ்சபூததேவதைகளி னுள்ளும் செயல்படுகிறது, (பஞ்சபூதங்களும் அவைகளின் தன்மாத்திரைகளும அதன் இந் திரியங்களும்) அவைகளை விளக்கிக்கொண் டிருக்கிறது. பல்வேறு சரீரங்கள் ஜீவனுக்கு உபாதியாக வந்தமைகின்றன. ஆத்மா ஒன்று. உபாதிகள் பல. இம்மூன்றில் ஒன்றைத் தவிர்த்து மற்றவைகளை நமமால் கிரகிக்க, உணர, காணமுடியாது. ஆனால் ஆத்மாவோ இமமூன்றுக்கும சாக்ஷியாக இருக்கிறது. இவற் றுககு அப்பாற்பட்டதாகவும் இருக்கிறது. எது இல்லாவிட்டால் இம்மூன்றும் இல்லையோ எது இமமூன்றுக்கும் ஆதாரமாக உள்ளதோ அது ஆதமா, ஆச்ரயம். அதற்குத் தன்னைத் தவிர வேறு ஆதாரம் இல்லை. ஆத்மா ஒன்றே அனைத்துககும ஆதாரமாய் அனைத்தையும் இயக்கி வருகின்றது.

உலகைக் காக்கவந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர்

(24-3-85 அன்று வேலூர் ஸ்ரீ ராமகிருஷ்ன ஆசிரமத் திறப்புவிழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்ர மணியம்அவர்கள் ஆற்றிய உரை)

உலகில் பெரும் நெருக்கடியான சூழ்நிலை உருவாகி வருகின்றது. அப்படி என்ன பெருங்குழப்பம் நாட்டிலே ஏற்பட்டது என் பதைப் பார்க்கவேண்டும். நம் நாட்டுச் சரித் திரத்தை இருநூறு ஆண்டு காலத்திற்குப் பார்த்தோமானால் எப்படிப்பட்ட குழப்பம்— நெருக்கடி உண்டாயின? இன்றைய வரைக்கும் உலகத்தில் தர்மம் எல்லாம் எந்த அளவு அழியும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

பெரிய குழப்பம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மெக்காலே இந்தியாவில் ஆங்கிலக் கல்வி முறையைப் புகுத்திய அந்த ஆண்டுதான் பிறந்தார். ஆங்கிலக் கல்வி முறையை இந்தியாவில் புகுத்திய மெக்காலே "இனி உண்மையான இந்தியர்கள், இந்துக் கள் இந்த நாட்டில் இருக்கமாட்டார்கள். ஆங் கில மனோபாவமும் நடையுடையும் கொண்ட வர்களான இந்தியர்கள்தாம் இருப்பார்கள். அப்படி இருப்பவர்களை வைத்துக்கொண்டு இந்திய நாடு முழுவதையுமே கிறித்துவ நாடாக மாற்றிவிடலாம்" என்று கூறினர். அன்றைய நாளிலிருந்து இந்தியாவும், உலகமும் எவ்வ ளவோ மாறிக்கொண்டு வந்துவிட்டன குழப் பங்கள் அதிகரித்துவிட்டன. இதற்குக் காரணம் விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் நுட்ப வளர்ச்சியுமேயாகும்.

உலகம் சுருங்கிவிட்டது:

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வில் உள்ள ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு (self sufficiency) பெற்ற கிராமமாக இருந்தது. வெளியிலிருந்து பொருள்கள் இல்லாமலேயே அங்கு விளைந்த பொருள்களைக்கொண்டே மக் கள் வாழ்ந்தார்கள். ஆனல் இன்றைக்கு அது முடியாது. எந்தக் கிராமமும் எந்த நாடும் தனித்து வாழமுடியாது. உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. தரை வழியாகவும், பிறகு நீர்வழியாகவும், அதன் பிறகு ஆகாய வழியாக வும் போக்கு வரத்துக்கள் அதிகமாகி விட்டன. காலையில் இந்தியாவில் சாப்பிட்டு விட்டு அன்றைய மாலைக்குள் உலகம் முழு வதும் சுற்றிக்கொண்டு இங்கேயே திரும்பி வந்துவிடும் அளவிற்குப் போக்கு வரத்து வேகம் அதிகரித்து விட்டது. இந்த வேகம் போதாது; இன்னும் அதிகமாக வேகம் வேண் டும் என்று முயல்கின்றனர். இத்தகைய போக்குவரத்து மக்களை மிகவும் நெருக்கத்தில் கொண்டுவந்து விட்டது.

பெருக்கம் நெருக்கம்

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் மக்கள் பெருக்கம் அதிகமாகிவிட்டது. அதனல் போட்டிகளும், பொருமைகளும் சண்டை சச்சரவுகளும் அதிகமாகிவிட்டன விஞ்ஞானத் தின் வளர்ச்சி பாராட்டுதற்குரியதாய், ஆனல் நல்ல வழியில் மட்டும் வளராமல் உலகை அழிக்கும் பயங்கரமான ஆயுதங்களைச் செய் யும் நிலைமையிலும் விஞ்ஞானம் வளர்ந்திருக் கிறது. கத்தியினல் சண்டையிட்டவர்கள் துப் பாக்கி கண்டு பிடித்தார்கள். துப்பாக்கிக்குப் பிறகு பீரங்கி வந்தது. அதன் பிறகு அணு குண்டு வந்தது. அணுகுண்டை ஏற்றிச்செல்ல விமானம் பயன்படுததப்பட்டது. இப்போது ஆள் இல்லாத ஏவுகணைகள் அணுகுண்டை ஏற்றிக்கொண்டு கண்டம் விட்டுக் கண்டம் தானே பறந்து சென்று தாக்கும் நிலை ஏற்பட் டுள்ளது.

திரையைப் பார்த்துக் கொண்டு இருக்கிருர்கள் :

இப்போது அமெரிக்காவும், ரஷ்யாவும் அணுகுண்டுகளைப் பெரிய அளவில் தயாரித்து வைத்துக்கொண்டு அவற்றை அடுத்த நாட்டின் மீது செலுத்துவதுபற்றிய நினைப்பிலேயே மூழ்கியிருக்கின்றன. அமெரிக்கா, ரஷ்யாவி லிருந்து வரும் அணுகுண்டுகள் ஆகாய வழி யாக வந்தால், அவற்றை உடனே காட்டும் கருவியை வைத்துக்கொண்டு அமெரிக்கா பார்த்துக்கொண்டிருக்கிறது. அது போன்றே ரஷ்யாவில் உள்ளவர்கள் ஒரு இயந்திரத் திரையை வைத்துக்கொண்டு அமெரிக்காவி லிருந்து எப்போது அணுகுண்டு வரப் போகிறது என்பதைப் பார்த்தபடியே உட்

கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அமெரிக்கா ஒரு செல்வம் மிகுந்தநாடு; ரஷ்யாவும் ஒரு செல்வம்மிகுந்தநாடு; அங்கே இருப்பவர்கள்செல்வத்தில் திளைக்கிறார்கள்; மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அவையெல்லாம் ஒன்றுமில்லை. அவர்கள் இருவரும் இப்போது செய்து கொண்டிருப்பனவெல்லாம் அணு குண்டு எப்போது வந்து விழுமோ என்ற பயத்துடன் அந்தத் திரையைப் பார்த்துக் கொண்டிருப்பதுதான். ரஷ்யாவிலிருந்து அணுகுண்டுகள் அமெரிக்கா வரப் பன்னிரண்டு நிமிடங்கள் ஆகும். அது போலவே அமெரிக்காவிலிருந்து செல்லும் அணுகுண்டு ரஷ்யாவைத் தாக்க பன்னிரண்டு நிமிடங்கள் ஆகும் என்று சொல்லப்படுகிறது. ஒருமுறை பறவைக் கூட்டங்கள் வானத்தில் பறந்து வந்தன. அந்தக் காட்சி அமெரிக்காவில் உள்ள இயந்திரத் திரையில் ரஷ்யாவிலிருந்து அணு குண்டுகள் வருவதைப் போலத் தோற்றமளிக்கவே அமெரிக்காவிலுள்ள அணுகுண்டுகளை ரஷ்யாவில் விழச் செய்யப் பித்தான்களை அமுதத ஏற்பாடுகளை எல்லாம் செய்து விட்டார்கள். பிறகு எப்படியோ அது பறவைக் கூட்டம் என்பதை அறிந்து நிறுத்தப்பட்டது. அந்தப் பயங்கரமான அபாய நிலையில் உலகம் இப்போது உள்ளது.

மக்களைக் காப்பாற்றுவேன்

ரஷ்யா ''மார்க்கிஸ்ட் சித்தாந்தத்தால்தான் உலகமக்களைக் காப்பாற்றமுடியும்; அதைப்பரப்புவதற்குத்தான் நாங்கள் அணுகுணடு வைத்திருக்கிறோம்'' என்று கூறுகிறது. அமெரிக்கா ''கம்யூனிஸ்ட் சித்தாந்தம் மக்கள் வாழ்க்கையை நாசமாக்கிவிடும்; அது மக்களுக்கு விரோதி; அதைத் தடுப்பதற்குத்தான் நாங்கள் அணுகுண்டு வைத்திருக்கிறோம்'' என்று கூறுகிறது. இப்படியே இரண்டுபேரும் கூறிக்கொண்டு உலகை அழிக்கும் அணுகுண்டுகளைப் பெருக்கிக்கொண்டே போகிறார்கள். இப்படியே போனால் புராணங்களில் சொல்வது போன்று பிரளயகாலம் அல்லது உலகம் முழுவதுமே அழியும் காலம் வந்துகொண்டிருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அணுகுண்டுப்போர் ஆரம்பமானால் உலகத்தில் ஓர் உயிரும் இருக்காது. நம்முடைய நாடு கூட்டுச் சேரா நாடு என்று சொல்லப்படுகிறது. போர் என்று வந்தால் அதிலிருந்து கிளம்பும் கதிர் வீச்சிலிருந்து இந்திய நாடும் தப்ப முடியாது.

இராமகிருஷ்ணர் தோன்றினர்

இப்படி அணுகுண்டுகளை அடுக்கி வைத்துக் கொண்டு இரவும் பகலும் யார் முதலில் போடுவார்கள் என்று பயந்துகொண்டு இன்றைய உலகம் வாழ்ந்துகொண்டு இருக்கிறது. இதற்கும் மேலான பயங்கரமான நிலை ஒன்று இருக்கிறது. இந்த அணுகுண்டு செய்வது நாளுக்கு நாள் சுலபமாகிக்கொண்டு வருகிறது. ஒரு பெரிய கொள்ளைக் கூட்டம் ஒரு தனித்தீவில் இரகசியமாக அந்த அணுகுண்டுகளைத் தயாரித்து வைத்துக்கொள்ள முடியும். இந்த அணுகுண்டுகளை வைத்துக்கொண்டு நான் கேட்பதைக் கொடு. இல்லையென்றால் இந்த அணுகுண்டை உன்மீது போடுவேன் என்று உலகத்தை மிரட்ட முடியும். கொடுக்காவிட்டால் 'நானும் சாகிறேன் நீயும் செத்துப்போ' என்று இந்த அணுகுண்டை நிச்சயம் உலகநாடுகள் மீது போடலாம். இத்தகைய நிலையில் உலகம் இன்று இருக்கிறது. உலகத்தை இதிலிருந்து எப்படிக் காப்பாற்றுவது? யாரால் காப்பாற்ற முடியும்? இதைக் காப்பாற்றுவதற்குத்தான் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தோன்றினர்.

சுவாமி விவேகானந்தர்

இந்தியா அடிமைப்பட்டு வறுமையிலும் குழப்பத்திலும் இருந்த காலத்தில் சுவாமி விவேகானந்தர் பஞ்சாபிலிருந்து குமரிவரை நடந்து பயணம் செய்தார். மக்களின் துன்பத்தை நேரில் கண்டார். வறுமையாலும், கல்வி அறிவு இல்லாமையாலும் மக்கள் படும் துன்பங்களைக் கண்டார். இவற்றைப் போக்க அவர் அமெரிக்கா சென்றார். அதற்குப் பிறகு எவ்வளவோ துறவிகள் அமெரிக்கா சென்று சமயப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். ஆனால் முதன் முதலில் சென்றவர் சுவாமி விவேகானந்தர்தான். அங்குள்ள மக்கள் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக மிகுந்த செல்வ வாழ்வு வாழ்வதைக் கண்டார். ஆனால் மெய்ஞ்ஞான அறிவு குறைவாக இருப்பதால் அவர்கள் அமைதியின்றித் துன்பப்படுவதையும் கண்

டார். இந்தியாவில் மெய்ஞ்ஞானம் இருக்கிறது. விஞ்ஞானம் இல்லை. அதனால் இந்திய மக்களிடம் அமைதி இருந்தாலும் பட்டினியாலும், பசியாலும் வாடிக்கொண்டு இருந்தார்கள். அமெரிக்க மக்களிடத்தில் விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. மெய்ஞ்ஞானம் இல்லை. அதனால் அமைதியில்லை. விவேகானந்தர் இந்த இரண்டு நிலையையும் மாற்றவேண்டும் என்று கூறினர். இந்தியாவுக்கு மெய்ஞ்ஞான அறிவோடு விஞ்ஞான அறிவும் வேண்டும் என்றார். விஞ்ஞான அறிவு படைத்துள்ள மேனாட்டினருக்கு மெய்ஞ்ஞானம் தேவைப்படுகிறது. இந்த இரண்டும் சமநிலையில் இருந்தால்தான் உலகம் இன்றைய பயங்கர நிலையில் இருந்து தப்பி வாழ முடியும். விஞ்ஞானத்தையோ, மெய்ஞ்ஞானத்தையோ எந்த நாடும் புறக்கணிக்கலாகாது. இரண்டு ஞானத்தையும் வளர்த்தால்தான் வாழ்வில் உண்மையான இன்பத்தைக் காணமுடியும் என்றார் சுவாமி விவேகானந்தர்.

இந்தியாவின் நிலை

நம் நாட்டில் இப்போது எல்லாத் துறைகளிலுமே குழப்பங்கள் நிறைந்துள்ளன. அரசாங்கக் காரியங்களைச் செய்வதில் லஞ்சம் பெருகி விட்டது செய்யமுடியாத காரியத்துக்குத்தான் முன்பெல்லாம் லஞ்சம் தருவார்கள். இப்போது செய்ய வேண்டிய காரியங்களுக்கும் லஞ்சம் கேட்கிறார்கள்; கொடுக்கிறார்கள். லஞ்சம் கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்ற நிலை இப்போது ஏற்பட்டுவிட்டது. லஞ்சம் வாங்குவதோ, லஞ்சம் தருவதோ தவறு என்ற எண்ணம் மக்களுடைய உள்ளத்திலிருந்து மறைந்து வரும் நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

பல்வேறு சமயங்கள்

இன்றைய உலகத்தில் பல்வேறு சமயங்கள் உள்ளன. ஒரு காலத்தில் ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஒரு சமயம் மட்டுமே இருந்தது. அமெரிக்காவில் முன்பெல்லாம் இந்துக்கள் மிகமிகக் குறைவு. அங்கே நம் இந்தியப் பெண்கள் சேலை அணிந்து சென்றால் விசித்திரமாகப் பார்ப்பார்கள். ஆனால் இன்று அப்படியில்லை. நிறைய இந்தியர்கள் தமிழர்கள் அங்கே இருக்கிறார்கள். தமிழர்கள் டெல்லியில் இருக்கிறார்கள். இந்தியாவில் பம்பாயிலே மாதுங்காவில் தமிழர்கள் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் அமெரிக்காவில் கிறித்தவர்கள் மட்டுமே இருந்தார்கள். இப்போது எல்லாச்சமயத்தவர்களும் இந்துக்கள் முஸ்லீம்கள் என்று பல சமயத்தவரும் அங்கே வாழ்கிறார்கள். இந்தியாவை எடுத்துக்கொண்டால் சொல்லவே தேவை இல்லை. உலகத்தில் எத்தனைச் சமயங்கள் இருக்கின்றனவோ அத்தனைச் சமயங்களும் இந்தியாவில் உள்ளன. இங்கு முஸ்லீம்கள் ஒரு கணிசமான பகுதியாக இருக்கிறார்கள். அவர்களை ஒதுக்கித் தள்ளிவிடவோ, வேறுபடுத்தி வாழவோ இயலாது. விஞ்ஞானத்தின் விளைவாகப் போக்குவரத்தின் வேகம் அதிகரித்ததாலும் மக்கள் பெருக்கம் அதிகரித்ததாலும் எல்லா நாடுகளிலும் பல்வேறு சமய மக்கள் வாழும் நிலை ஏற்பட்டு விட்டது. இனி உலகத்தில் எந்த நாட்டிலும் ஒரே சமய மக்கள் வாழ்வது என்பது முடியாத காரியம். எனவே, உலகத்தில் எந்தச் சமயத்தவரும் மற்றச் சமயத்தை வெறுக்கவோ, எதிர்த்துச் சண்டையிடவோ முடியாது. அப்படிச் செய்தால் அமைதி இழந்து துன்பப்படவேண்டியதுதான் கைகண்ட பலனாக இருக்கும்.

எல்லாச் சமயங்களும் பாதைகள்

எனவே எல்லா மக்களும் எல்லாச் சமுதாயத்தையும் மதிக்கவேண்டும். இது உலக மக்கள் அமைதியாக வாழவேண்டுமேயானால் பின்பற்ற வேண்டிய ஒரு கட்டாயமான முறையாகும். இந்த நிலையை உலகத்திற்கு உணர்த்தவே பரமஹம்சர் தோன்றினர். அவரது கொள்கை எல்லாச் சமயங்களும் ஒன்று என்பது அன்று. சமயங்கள் வெவ்வேறானவை; ஆனாலும் அவற்றின்மூலம் அடைகின்ற கடவுள் ஒருவரே என்பதாகும். அதை அவர் தம் அனுபவத்தில் கண்டு தெளிவாக உணர்த்தினர்.

வேலூர் இருக்கிறது

இங்கு வேலூர் இருக்கிறது. வேலூரை அடையவேண்டும். அதற்குக் கிருஷ்ணகிரியிலிருந்தும் வரலாம், பெங்களூரிலிருந்தும் வரலாம், சென்னையிலிருந்தும் வரலாம். வழிகள் வேறு; அடையக்கூடிய இடம் ஒன்றே. அதைப் போலவே அடையக்கூடிய கடவுள்

ஒன்றே; அதனைப் பல வழிகள் மூலம் அடைய லாம். அந்தப் பல வழிகள் தாம் பலவித சமயங் கள். எனவே வழியைப் பற்றிச் சண்டை யிடாமல் அவரவர்களுக்கு அமைந்த வழியில் கடவுளை அடையவேண்டும். இதைத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் வாழ்வின் மூலம் நிலை நாட்டினர்.

அடைவதற்கான வழி

இந்த நிலைகளை அடைவதற்காகத்தான் இப் போது இங்கு அமைந்துள்ளதைப் போல இராமகிருஷ்ணர் ஆசிரமங்கள் பல அமைய வேண்டும். இங்கே மக்கள் வந்து கூடி அவரு டைய கருத்துக்களை அறிந்துகொண்டு அவை களை வாழ்வில் பின்பற்றவேண்டும்.

இந்தியக் குழப்பங்கள்

உலகத்தைப் போலவே இந்தியாவிலும் குழப்பங்கள் உள்ளன. இருநூறு ஆண்டு களாகவே இந்தக் குழப்ப நிலையைக் காண லாம். இந்தக் குழப்பத்தின் விளைவாகத்தான் இந்தியாவில் பிரிவினை ஏற்பட்டது. நான் சில நேரங்களில் நினைப்பதுண்டு. இதைக் கூறி ஞல் என்னை நாட்டுப்பற்று இல்லாதவன் என்று பலர் நினைக்கலாம். காஷ்மீரைப் பாகிஸ் தானுக்கு விட்டுத் தொலைத்து விட்டு நாம் ஏன் அமைதியாக இருக்கக்கூடாது என்று நினைப் பதுண்டு. அப்படிச் செய்தால் நம் நாட்டில் பெரிய குழப்பம் இருக்காது என்று நினைப் பேன். இந்தக் குழப்பம் எந்த நிலைக்கு வளர்ந் துள்ளது? பஞ்சாப் கலவரமாக மாறிப் பிரதமர் இந்திராகாந்தியை அவர் மெய்க்காப்பாளனே சுட்டுக் கொல்லும் நிலைக்கு வளர்ந்தது.

அரவிந்தர் வாக்கு

1942ல் கிரிப்ஸ் தூதுகோஷ்டி இந்தியா விற்கு வந்தது. அவர்கள் வந்ததன் நோக்கம் இந்தியாவின் உதவியைப் பெற்று ஜெர் மனியை வெல்ல வேண்டும் என்பதாகும். அப்போது உலகப் போர் நடந்துகொண்டிருந் தது. ஜெர்மனி பிரிட்டன் மீது போர் தொடுத் துக்கொண்டு இருந்தது. அந்தப் போரில் இங்கிலாந்துக்கு இந்தியா உதவ வேண்டும் என்றும் அதற்காக இந்தியாவிற்குச் சுதந்தரம் தருவது என்றும் ஒரு திட்டத்தை இந்தக் கமிஷன் கொண்டு வந்தது. இந்தத் திட்டத் தைப் பற்றி அரவிந்தர் அறிந்தபோது பாண் டிச்சேரியிலிருந்து திரு. முனிஷிக்கு ஒரு கடி தம் எழுதினர். அதில் நம் அரசியல் தலை வர்கள் அத்திட்டத்தை ஒப்புக்கொள்ளவேண் டும். அப்படி ஒப்புக்கொண்டுவிட்டால் அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பூரண சுதந்தரத்தை அடையலாம். நாடு அமைதி யுடன் இருக்கும். இல்லையென்ருல் பிரிவினை நேரும் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தியத் தலைவர்கள் அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. அதன் விளைவாக நாடு இந்தியா, பாகிஸ்தான் என்று பிரிந்தது. அதன் பிறகு மறுபடியும் அரவிந்தர் திரு. முனிஷிக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் இந்தியா 1947 ஆகஸ்டு 15ல் சுதந்தரம் பெறும் என்று எழுதி ஞர். ஆகஸ்டு 15ந் தேதி அரவிந்தர் பிறந்த நாள். அன்று தான் நாம் சுதந்தரம் பெற்ருேம். அதற்குப் பிறகு அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் பாகிஸ்தான் அழிந்துவிடும். அது நீடிக்காது என்றும் அவர் எழுதினர். அதன் படியே கிழக்குப் பாகிஸ்தானுக இருந்த நாடு வங்காள தேசமாகத் தனி நாடாகியது. மேலும் அவர் 1984 வரை இந்திய நாட்டில் பெரும் குழப்பமும் கலவரமும் இருக்கும்; அதன் பிறகு நாட்டில் அமைதி நிலவும்; செழிப்படையும்; உலகத்தில் இந்தியாவிற்குச் சிறந்த மதிப்பு ஏற்படும்; உலக மக்களுக்கு வழிகாட்டக்கூடிய நிலை ஏற்படும் என்று எழுதினர். 1984ஆம் ஆண்டுவரை இந்த நாட்டில் எவ்வளவு குழப் பம் இருந்தது! அவையெல்லாம் முடிந்துவிட் டன. இப்போது ஒரு புதிய நிலை, புதிய உற் சாகம் தோன்றி இருக்கிறது. இனிமேல் இந்தியா மிகச் சிறந்த நிலையை அடையும். இதற்கு அடிப்படையாக அமைந்தது ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரின் தோற்றமும் அவ ருடைய உபதேசங்களுமாகும். ஸ்ரீ ராமகிருஷ் ணர் உபதேசத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து உலகனைத்தையும் ஒன்றுபடுத்தி உலகை நல்வழியில் நடாத்துவதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கமாகும். இன்று உலகில் பல நாடுகளில் இராமகிருஷ்ண மடங்கள் இருக் கின்றன. மேலும் இராமகிருஷ்ண மடங்கள் எல்லாநாடுகளிலும் அமைந்து உலகை நல்வழி யில் நடாத்திச் செல்லும் பணி வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

கோதாவரி நதியில் நன்கு குளித்து விட்டுத் த்ரயம்பகேஸ்வர் என்ற ஊருக்குப் புறப்பட்டேன். இதுவும் ஒரு ஜோதிர்லிங்கஸ்தல மாகும். ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்து பூஜை செய்தகோயில் என்றும் சொல்கிறார்கள். மிகப் பழமையும், சாந்நித்தியமும் உள்ள கோயில். மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்த தனால் அவ்வூரைச் சுற்றிப் பார்க்க முடிய வில்லை. கோவிலில் அமர்ந்து மனம் உருகிப் பிரார்த்தனை செய்தேன். அங்கிருந்து ஷீரடி என்ற இடத்திற்குச் சென்றேன். அவ்விடத்தில் சாயிபாபா என்ற ஒரு மகான் வாழ்ந்த தால் எளிமையும் தவமும் பொருந்திய அவருடைய வாழ்க்கை அப்பகுதியிலுள்ள எல்லாருக்கும் பயன்படக்கூடியதாக இருந்தது. அவர் இருந்த இடத்தில் முன்பு எப்படி இருந்ததோ அதேபோன்று இப்பொழுதும் நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது. பலரும் தியானம் பண்ணிவிட்டுச் செல்கிறார்கள். அந்தப் பகுதியில் மழை இல்லாததனால் நன்கு சுற்றிப்பார்க்க முடிந்தது. பிற்பகல் அங்கிருந்து புனா செல்வதற்குப் புறப்பட்டேன். இரவு பதினொரு மணிக்குப் புனா போய்ச் சேர்ந்தேன். சத்திரபதி சிவாஜி மன்னனுடைய வாழ்க்கையில் பெரிதும் சம்பந்தப்பட்டிருந்த நகரம் புனா. இது பெரிய நகரம். புனாவில் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்து விட்டுப் பண்டரிபுரம் புறப்பட்டேன். மாலை ஆறு மணிக்குப் பண்டரிபுரம் போய்ச் சேர்ந்தேன். பாண்டுரங்கன் கோயில் சென்று தரிசனம் செய்தேன். கோயிலில் பக்தர்களுடைய பஜனை மனதை உருக்குவதாக இருந்தது. மீராபாய், சக்குபாய், கோரக்நாதர், துக்காராம் ஆகிய பக்தர்களின் திருநாமங்கள் ஒலித்தன. பிறகு கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து பண்டரிநாதனைத் தரிசித்தேன். ஸ்ரீமந் நாராயணன் விட்டோபாவாக ஒரு செங்கல்லின்மீது நின்றுகொண்டு காட்சி தருகின்றான். அந்த மூர்த்தியை நாம் தொட்டு வணங்கலாம். கட்டி ஆலிங்கனம் செய்யலாம். கண்ணீர் மல்கப் பிரார்த்திக்கலாம். வருகின்ற பக்தர்கள் எல்லோரும் இதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். வாயாரப்பாடி மனமாரச் சிந்தித்து, உள்ளத்திலே பக்திப் பெருக்கோடு கோயிலைவிட்டு வெளியேவர மனமில்லாது வெளியே வந்தேன். ஆஹா, பண்டரிபுரத்திலே ஏற்பட்ட ஒரு அனுபவம் ஒப்பற்ற அனுபவம். எல்லா பக்தர்களுக்கும் இது கிடைக்கின்ற அனுபவம். ஏனென்றால் அத்தலத்தின் மகிமை அத்தகையது.

பண்டரிபுரத்திற்குப் போகின்றவர்களுக்கு நேரே சில அனுபவங்கள் கிட்டும். அது பக்திக்கும், பஜனைக்கும் பேர் போன இடம் பண்டரிபுரம் என்பது சொல்லாமலே விளங்கும். பக்த விஜயம் என்ற பக்தர்களின் ஒப்பற்ற வரலாற்றைப் படிக்கும் போது பண்டரிபுரம் வராத அடியார் வரலாறே இல்லை எனலாம். வீதியில் பக்தர்கள் ஜால்ராவுடன் நர்த்தனம் ஆடிக்கொண்டு கூட்டம் கூட்டமாகப் போவதைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சி ஆகும். பண்டரிபுரத்தில் காணவேண்டிய காட்சி இன்னொன்று உள்ளது. கைகேடி மஹாராஜா என்னும் சாது ஒருவர் கட்டிய மாபெரும் கலைக்கூடம் என்று சொல்லாது பத்ம வியூகம் என்றே சொல்கிறார்கள். ஏனென்றால் பத்மவியூகம் என்பது மஹாபாரத யுத்தத்தில் கௌரவர்கள் பாண்டவர்களை வெல்ல அமைத்த வேலைப்பாடுகொண்ட சேனை அமைப்பு; அதன் உள்ளே போனால் மீண்டும் வெளியேவரத் தெரியாது அர்ஜுனன் ஒருவனே அந்தப் பத்ம வியூகத்தினுள் உள்ளே போகவும், அதிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பி வெளியேறவும் கற்றிருந்தான். ஆனால் அவன் மகன் அபிமன்யு உள்ளே போகத்தான் கற்றிருந்தானே தவிர வெளியேறும் கலையை அறிந்தவனல்லன். ஆகவே அவனைக் கௌரவர்கள் நயவஞ்சகமாகக் கொன்றார்கள். இப்படிப் பட்ட அந்தப் பத்மவியூகம் போன்ற சுரங்கப் பாதை அமைத்து நமது இந்திய கலாச்சாரம், நாகரிகம் ,முனிவர்கள் பண்பாடு,வாழ்க்கை,தவநெறி, இதிகாச புராணங்கள், முனிவர்கள் வரலாறு முதலியவற்றை உருவங்களாகச் செய்து தத்ரூபமாக அமைத்துள்ளனர். அது எல்

லோரும் பார்த்து வியக்கும்படியாக உள்ளது. அதைக் கண்டுவிட்டு ஷோலாப்பூர் சென்று சத்திரபதி சிவாஜி மன்னன் வாழ்வில் தொடர்புள்ள இடங்களைப் பார்க்க வேண்டி துல்ஜாபூர் புறப்பட்டேன். துல்ஜாபூரில் சிவாஜி மன்னன் வழிபாடு செய்து தரிசனம் பெற்று வாள் வாங்கிய பவானி மாதா கோயில் சென்றேன். ஒரே கூட்டம். வீரத்துக்குப் பேர்போன மகாராஷ்ட்ராவில் கோயில் வழிபாட்டிலும் வீரத்தோடுதான் செயல்புரிகிறார்கள். பக்தி என்ற பெயரில் எந்தவிதக் கீழ்மையும் அங்கீகரிக்கப்படுகிறது. கோயிலுக்குள் எப்படியோ இடித்து நெரித்து உள்ளே போனவுடன் ஓங்கிய வாளைக் கையிலே ஏந்தியுள்ள பவானி மாதாவைத் தரிசிக்க உள்ளே போகுமுன் உள்ளே போகமுடியாது வெகுநேரம் காத்திருக்க விருப்பம் இல்லாத சில கூட்டத்தாரை ஒருவன் அழைத்து அவர்கள் நைவேத்தியப் பொருளை வாங்கி ஆங்கிருந்தே அம்மனுக்கு நைவேத்யம் செய்வதாகச் சொல்லி சிறிது எடுத்து மிகவும் பவ்யமாக நைவேத்யம் காட்டிவிட்டு அதைத் தட்டில்போட்ட பிறகு அதையே எடுத்து மீண்டும் தன் வாயில் போட்டுக்கொண்ட அருவருப்பான நிகழ்ச்சியைச் சமய அனுஷ்டானமாக ஏற்றுக்கொள்கிற நிலையைப் பார்க்கிறபோது நெஞ்சம் விம்முகிறது. அதையும் பார்த்துவிட்டு எப்படியோ பஸ் ஸ்டாண்டு வந்தால் அங்கு ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு சிலர் என்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். என்னவென்று கேட்டேன். ஒருவர் வேஷ்டி கட்டியிருந்தால் அவரை மதராஸி என்று எண்ணிக்கொண்டு அலட்சியமாகப் பார்ப்பது பொதுப்பட வடநாட்டாருடைய போக்கு. என் வடநாட்டு யாத்திரையில் பல தமிழர்களைக் கண்டுகொள்ளவும், தமிழில் பேசி அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் பெரிய உதவியாக இருந்தது இந்த வேஷ்டியைப் பார்த்ததால்தான். ஒவ்வொரு மாநிலத்தில் உள்ளவனும், ஒவ்வொரு நாட்டானும் தான் கடைப்பிடிக்கும் கொள்கையே உயர்ந்த கொள்கை என்ற எண்ணம் இருக்கும்வரை இத்தகைய பேத புத்தி இருக்கத்தான் செய்யும். ஏன் விவேகானந்த சுவாமிகளே அமெரிக்காவுக்குப் போன போது அங்நாட்டில், அவ்வூர் வாசி ஒருவன் சுவாமியின் தலைப்பாகையைப் பிடித்து இழுத்து உலுக்க வில்லையா? அவனிடத்தில் விவேகானந்தர் ஏன் இப்படி இழுத்தாய் என்று கேட்டபோது நீங்கள் எங்களைப் போன்று உடை உடுக்காது ஏதோ மனம் போன போக்கில் உடை உடுத்தி தலையில் தலைப்பாகை அணிந்துள்ளீர்கள் என்று எரிச்சலடைந்து இவ்வாறு செய்தேன் என்றான் அவன்.

பிறகு துல்ஜாபூரை விட்டு ஔரங்காபாத் செல்லும் வண்டியில் ஏறி ஔரங்காபாத் புறப்பட்டேன். ஔரங்காபாத்தில் எனக்கு எல்லா வசதியும் பண்ணித்தந்து நான்கு நாட்களுக்கு ஔரங்காபாத்தையும், அதனைச் சுற்றியுள்ள இடங்களையும், பல ஜ்யோதிர் லிங்கம் உள்ள கோயில்களையும் காண எல்லா வசதியும் பண்ணித்தந்தவர் முன்பு முழுநேர ஊழியராயிருந்த R.S.S. அன்பராவார். அவர் டைப்ரைட்டிங் ஸ்கூல் நடத்தி வருகிறார். அவருடைய துணைவியாரும் காட்டிய அன்பும் சேவையும் ஒப்பற்றது. நான்கு நாட்களும் சத் சங்கம் செய்தல், விஸ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசுதல், பரலிவைத்யநாத் கோயில் சென்று வருதல்,எல்லோரா குகைக் கோயில் பார்த்தல், இப்படியாகத் திட்டமிட்டு நான்கு நாட்களையும் நல்ல விதமாகக் கழித்து, ஔரங்காபாத்தை இறுதியில் சுற்றிப் பார்த்தேன். முஸ்லீம் ஆட்சியின்பொழுது சிறப்புற்ற நகரம். மதவெறியன் ஔரங்கசீப் தன் மனைவிக்கு என்று தாஜ்மஹால் போன்று ஔரங்காபாத்தில் ஒன்று கட்டியுள்ளான். இறுதியில் அவனுடைய சவத்தை ஔரங்காபாத்தில் எளிய முறையில் அடக்கம் செய்யும்படி எழுதி வைத்துத்தான் மாண்டான். முகமது பின் துக்ளக் தலைநகராக உருவாக்க ஔரங்காபாத்தைத் தேர்ந்தெடுத்து உருவாக்கி மக்களை டில்லியினின்று ஔரங்காபாத்திற்குக் குடியிருக்கச் செய்த கூத்து மக்கள் அனைவரும் அறிந்ததே. அப்போது அவன் எண்ணங்கள், முயற்சிகள், செயல்கள் இப்போதும் அவனுடைய ஆட்சியைக் கண்டு அவன் மீது அனுதாபப்படும்படி செய்கிறது. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு ஔரங்காபாத்திலிருந்து இந்தூருக்கு டிக்கட் எடுத்துப் பஸ்ஸில் ஏறினேன்.

குறிப்புகள்

உதகமண்டலத்தில் உயர்ந்த உள்ளங்கள்

"துப்பு உடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவர் என்றே ஒப்பி லேன் ஆகிலும் நின் அடைந்தேன்" என்று பெருமாளைப் பாடுவார் பெரியாழ்வார். உள்ளத்தால் உயர்வு, செல்வத்தில் சிறப்பு, கல்வியில் பெருமிதம், தொழிலில் வல்லமை போன்று மனிதன் அடையக்கூடிய பெருமைகள் பாரில் பலவும் உண்டு. யாவற்றிலும் சிறந்த பேறு எது எனில் நற்றாமரைக்குளத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் இறை நாட்டமுடைய அடியார்களும், பண்புடைய அன்பர்களும் ஒருங்குகூடி சத்விசாரத்தில் ஈடுபடுதலே ஆகும். சோர்விடத்துத் துணையாக வருகின்ற துப்பு உடையார் நிறைந்த நீலகிரித்தலங்களில் வருடம் இருமுறை அந்தர் யோகமும், ஆன்மீகச் சொற்பொழிவுகளும் நிகழ்த்துவது வழக்கமாகி வருகின்றது. தபோவனத்து ஆன்றோர் பதினறு ஆண்டுகள் அருந்தவம் ஆற்றிய அருள் மிகுந்த ஹட்டிகளில் "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா ஞானத் தமிழ் விளக்கேற்றி" வழக்கம்போல் பஞ்சயக்ஞங்களும் சென்ற மாதம் முறையாக நிறைவேற்றப்பட்டன.

இம்முறை மேலூர் ஒசஹட்டி, அரைஹட்டி, நஞ்சநாடு, குந்தசெப்பை, குன்னூர் ஆகிய ஊர்களில் இந்த யக்ஞம் நிகழ்ந்தது. கள்ளங் கபடமில்லாமல் வாழும் இடத்திற்கு ஏற்பக் குணத்திலும் சிகரங்களாய் விளங்கும் மக்கள் தபோவனத்து அன்பர்களை அகமும் முகமும் மலர வரவேற்றுத் தம் ஈடு இணையற்ற அன்பு என்னும் அமுதக் கடலில் முழுக்காட்டினர்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு பாத யாத்திரை சென்று வந்த இடங்களையும் பழகிய மனிதர்களையும் மீண்டும் காணுகையில் உள்ளத்தில் கழிபேருவகை பொங்கியது. சில்வர் ஒக்ஸ், வாட்டல், யூகலிப்டஸ், கிளைகோஸ் என்று பனிமலைகளுக்கே உரிய தாவரங்களின் சூழல் அகத்தேயும் புறத்தேயும் தணுப்பைத் தோற்றுவித்தது. அரசியலார் லாபம் காண்பதற்காக மக்களுக்குக் குடிப்பழக்கத்தை ஏற்படுத்தி இலட்சக்கணக்கான குடும்பங்கள் சீரழியச் செய்கின்றனர். காரிருளில் ஒளி விளக்குப் போல இந்தப் பரிதாபகரமான சூழலில் பக்தர்கள் பார்த்துப் பரவசமடையும் வகையில் ஓரிரண்டு ஊர்களாவது மிஞ்சியிருப்பது உண்மையில் தெய்வ லீலை என்று தான் சொல்ல வேண்டும். மேலே குறித்த ஊர்களுக்கு மேலும் ஒரு தனிச் சிறப்பு உண்டு.

முதலில் சென்ற அரைஹட்டியில் இப்பொழுதுதான் முதன் முதலாகத் தூய துறவி ஒருவர் அழைக்கப்பட்டு அறவுரை நிகழ்ச்சி நடக்கின்றது என்று கூறினர்கள். கூட்டம் ஆரம்பிக்கு முன் உடன் அழைத்துச் சென்ற அன்பர் அறிமுக உரைகள் ஆங்காங்கே நிகழ்த்தித்தபோவனம் புகட்டி வரும் ஆன்ம நெறியினைவிளக்கினர். "தேவரு நமகே ஒள்ளங்கே பாடலி" என்று படகமொழியில் நல்வாழ்த்துக்களைச் சென்ற இடத்திலெல்லாம் மலர்ச்செடியின் விதைகள் போல அவர் தூவிச் சென்றார். மற்றோர் அன்பர் குறைந்த அவகாசத்தில் நிறைய ஊர்களைப் பார்த்தல், காலந்தவருமை முதலிய ஏற்பாடுகளில் கண்ணும் கருத்துமாக இருந்தார். மேலூர் ஒசஹட்டிக்கு இது மூன்றாவது விஜயமாகும். குழந்தைகள், பெண்கள் உட்பட யாவரும் ஒருங்கிணைந்து செய்யும் பகவந் நாமபஜனை எப்பொழுதும் இங்கு செவிக்கும், ஆன்மாவுக்கும் ஒருங்கே படைக்கும் சத்துணவாக அமைந்திருக்கும்.

நஞ்சநாடு என்பது எல்லாவற்றிலும் பெரிய கிராமமாகும். மனதை ஒருமுகப்படுத்தும் அற்புதமான கீதங்கள் இங்கும் தொடர்ந்தன. திருமடத்தில் பயிற்சி பெற்ற அம்மையார் ஒருவர் தம் பொறுப்பில் இவ்வூரில் மாதர்களுக்கான சாரதா சங்கம் அமைத்து ஆன்மீகத்தொண்டுகளில் ஈடுபட்டுவருகிறார். பெண்கள் பதினொரு மணிக்குத் தெய்வத் துதிப்பாடல்களைப் பாட ஆரம்பித்தார்கள். மூன்று மணிநேரம் தொடர்ந்து உணவையும் மறந்து இசையில் ஈடுபட்டனர். அவர்கள் இறைவனை அழைத்த குரல் ஒலிபெருக்கி வழியே சுற்றுப்புறத்தில் இருந்தோர்களை எல்லாம் சென்றடைந்து மலைமுகடுகளிலும் பட்டு எதிரொலித்தது. ஒவ்வோர் ஊரிலும் தாய்மார்கள் இத்தகைய

பண்பாடு மிக்க செயல்களில் ஈடுபட்டால் நமக்குற்ற துயரங்களெல்லாம் விலகிப்போய் நாடு விரைந்து முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை. நஞ்சநாடு மக்கள் ஊர் மையத்தில் பெருமளவில் கூடி அருளுரையினை மிக்க சிரத்தையுடனே செவிமடுத்தார்கள்.

பின்னர் குந்தசெப்பை ஊரினர் சகல கோவில் மரியாதைகளுடனும் வரவேற்றுத் தபோவனத்துத் துறவியைத் தமது ஊர் சிவன் கோவிலுக்கு அழைத்துச் சென்றூர்கள். அங்கு அருளுரை நிகழ்த்தப்பட்டது.

திருவிளக்குத் தொழுதல்

சித்திரை மாதம் முதல் நாளன்று புது வருடப் பிறப்பை ஒட்டி எங்கும் விசேஷ வழிபாடுகள் நிகழும். ஈரோட்டுக்கு அருகே உள்ள எழுமாத்தூர் என்னும் ஊரில் அருள்மிகு பொன்காளியம்மன் கோவில் உள்ளது. இந்தத் தேவி வரசித்தி அருள்பவள். காண்பவர் கருத்தைக் கொள்ளைகொள்ளும் வடிவழகும் பொருந்தியவள் இந்தத்தாய். இக்கோயிலில் வருடப் பிறப்பன்று இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட தாய்மார்கள் திருவிளக்குகள் ஏற்றிவைத்து விசேஷ பூஜைகள் செய்தார்கள். அன்றைய தினம் சகல மரியாதைகளுடன் ஊர் மக்கள் பக்தர்களை வரவேற்றுக் கோவிலுக்கு அழைத்துச் சென்றூர்கள்.வைராக்கிய சித்தததுடன் மூன்று மணிநேரம் சிரமம் பாராமல் தாய்மார்கள்தவம் செய்வது போலத் தங்கள் கைங்கரியத்தில் மனம் ஒன்றித்துக் காணப்பட்டார்கள். முதலில் தமிழில் நூற்று எட்டுப் போற்றிகள் கூறி வண்ணமலர்கள, வாசமலர்கள், அட்சதை, குங்குமம், வில்வம், துளசி ஆகியவற்றினல் விளக்குகளை அர்ச்சித்தார்கள். பினனர் கோவிலில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் "ஓம் ஐம் மகா சக்தியை நம:" என்னும் மந்திரத்தை உச்சாரணை செய்து நாம ஜப யக்ஞத்தில் ஈடுபட்டனர். அவர்கள் திருவிளக்குக்கு அர்ச்சித்த பொருட்களை அவரவர்களே மீண்டும் பெற்றுச் செல்லவில்லை. மாருக எல்லாம் கலந்து, வந்திருந்த பக்தர்கள், பக்திமதிகள் யாவருக்கும் தெய்வப் பிரசாதமாக அவற்றை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. யாவரும் சேர்ந்து ஓதிய தெய்வத் திருநாமத்தின் ஒலி விண்ணைப் பிளந்து ஊனைக் கரைத்தது. உள்ளத்தில் குடிகொண்டிருந்த அருட்சக்தியை விருட்டென்று தட்டி எழுப்பியது. ஆன்மாவில் ஆண், பெண் என்ற பேதமில்லை; அனைவரும் இறைவனின் அருட்குழந்தைகள் தாம்; வெளியே ஒளிர்கின்ற சுடர் அகத்தே மிளிரும் ஆன்ம ஒளியின் புறத் தோற்றம்தான்—என்பனபோன்ற பல உண்மைகளைப் பக்தர்கள் அன்று நிதர்சனமாகக் கண்டு உணர்ந்தனர். உலகில் யாண்டும் அசுர சக்திகளுக்கும், தெய்வ சக்திகளுக்கும் இடைவிடாத போராட்டம் நிகழ்ந்துகொண்டே இருக்கும். தருமமே இறுதியில் வெல்லும். மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் அந்தரங்கத்தில் இத்தகைய போராட்டம் நிகழ்வது கண்கூடு. தரும நெறியில் உறுதியான பற்றும், பிடிப்பும் நாம் பெற்றிருத்தல் அவசியமாகும். கோயிலைப்போன்ற புனிதமான இடங்களில் யாவரும் ஒருங்கு திரண்டு இத்தகைய புண்ணியச் செயல்களைச் செய்வதால் எங்கும் அருட்சக்தி பெருகும். மருட்சக்திகள் மடிந்து போகும். ஊர்கூடித் தேர் இழுப்பதன் தத்துவம் இதுவே யாகும். ஒரே ஒரு மனிதர் தம் தலையில் சுமந்து செல்லக்கூடிய மூர்த்தியைத் திருத்தேரில் வைத்துப் பல்லாயிரக் கணக்கான பேர்கள் எல்லா வேறுபாடுகளையும் அறவே மறந்து வடம் பிடித்து இழுக்கையில் தோன்றுகின்ற ஆன்ம சக்தியே ஊரையும், உயிர்களையும் ஒன்று சேர்த்து உணர்வைக் குளிர வைக்கின்ற மகாசக்தியாகும். திருவிளக்கு வழிபாட்டின் சிறப்பும் இத்தகையதே. இத்தகைய அருள் நிலை ஊர்கள் தோறும் பெருகுவதாகுக என்று அறவுரை வழங்கப்பட்டது.

கலைமகளைப் போற்றுவோம்

தெய்வ வணக்கம் என்பது வெறும் சடங்குகளால் ஆனதன்று. தெய்வத்தின்மீதுகொண்டுள்ள பக்தி செயல்களின் மூலம் வெளிப்பட வேண்டும். வெறும் பூஜை முதலிய புறவெளித் தோற்றங்களால் நாம் தேவயக்ஞத்தைச் சரிவர நிறைவேற்றுதல் இயலாத காரியமாகும். கல்விக்கு உரிய கடவுளைச் சரிவரக் கல்வி கற்றல், கற்பித்தல் ஆகிய செயல்களினலேயே நாம் முறையாக வழிபட்டவர்கள் ஆவோம். இக் காலத்தில் பண்பாட்டுக்கல்வி என்பது மிகவும் அருகிவருகின்றது. வயிற்றுப் பிழைப்புக்கான கல்வியிலேயே யாவரும் கவனம் செலுத்துகின்

றனர். அவ்வாறு இன்றி நாட்டை வழிநடத்திச் செல்லத்தக்க நல்ல தலைவர்களை உருவாக்கும் கடுமையான பணியில் ஒரு சில நல்ல பள்ளிகளே இன்று ஆர்வம்கொண்டுள்ளன. அத்தகைய பள்ளிகளுள் இரண்டினைப்பற்றி இங்கே குறிப்புகள் தரப்படுகின்றன. நாட்டின் கலாசாரத்தில் அக்கறையுள்ள அன்பர்கள் இக்குறிப்புகளைப் படித்துப் பார்த்துத் தத்தம் ஊர்களில் உள்ள பள்ளிகளிலும் இவற்றைச் செயல்படுத்த முன்வருவார்களாக.

சேலம் ஜில்லாவில் மேட்டூருக்கு அருகே உள்ள சின்னத்தண்டா என்ற ஊரில் ஸ்ரீராம கிருஷ்ண குருகுலப்பள்ளி இயங்கிவருகிறது. பெரும்பாலும் அக்கம் பக்கமிருந்து வரும் ஏழைக்குடும்பங்களைச் சார்ந்த சிறுவர், சிறுமியர் இங்கு பயில்கிறார்கள். ஒற்றுமை, ஒழுக்கம், உழைப்பில் ஆர்வம்போன்ற நல்ல பண்புகளில் தக்க பயிற்சி பெறுகிறார்கள். கடந்த மாதம் இங்கு நிகழ்ந்த ஆண்டுவிழாவில் பலவிதமான உடற்பயிற்சிகள், நாடகம், நடனம் ஆகியவற்றைச் செய்து காட்டித் தங்கள் வல்லமையை வெளிப்படுத்தினார்கள். பெரிய பட்டணங்களில் உள்ள பள்ளிகளில் காணமுடியாத நல்ல இயற்கைச் சூழலை இந்தக் கிராமத்துப் பள்ளி பெற்றுள்ளது. கல்விக்கு உகந்த சூழ்நிலை இதுவே.

திருச்சி உறையூரில் உள்ள கலைப்பள்ளி போதிய கட்டட வசதிகள் இல்லாதிருப்பினும் அங்குப் பணிபுரியும் ஆசிரியைகள், பயிலும் மாணவ மாணவிகள் ஆகியோர் மிக்க உற்சாகத்துடனே காணப்படுகிறார்கள். சென்ற மாதம் மூன்றுமணி நேர நிகழ்ச்சி ஒன்றை "ஆரம்பக்கல்வி ஆய்வு விளைவுகள்" என்ற தலைப்பில் இங்கே ஏற்பாடு செய்திருந்தனர். இப்பள்ளியின் நிர்வாகி தபோவனத்துக் குருகுலத்தில் அளிக்கும் பயிற்சி முறைகளையே தமது பள்ளியிலும் மேற்கொண்டுள்ளார். ஐந்தாம் வகுப்பு வரையிலும் சிறு குழந்தைகளுக்கு ஆன்மீகத்தில் ஆழமான அடிப்படை ஞானத்தையும், பிடிப்பையும் இங்கே அளிக்கின்றார்கள். வெறும் புத்தக அறிவை ஊட்டி மூளையைப் பொதி சுமக்கும் கழுதையாகச் செய்வதில்லை. இதற்கு மாறாக நற்பண்புகளையும், நல்லறிவையும் வளர்க்கும் பயிற்சிக் கூடமாக இந்தப்பள்ளி விளங்குகிறது. இங்குள்ள பத்து வயதுக்கும் உட்பட்ட மாணவ மாணவிகள் கீதையைப் பாராயணம் செய்கின்றார்கள். அறுபது குறளுக்குமேல் தெரிந்து வைத்துள்ளார்கள். கந்தர் அனுபூதி, வேதமந்திரங்கள், மூவர் தேவாரம் முதலிய அருளாளர்களின் பாடல்களைத் திவ்யமாகப் பாடுகின்றார்கள். விஞ்ஞானம், பொது அறிவு, இலக்கியம் என்று பலவேறு துறைகளிலும் பெரும்பாலான உயர்நிலைப்பள்ளி மாணவர்களைவிடச் சற்று அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இக்கலைப் பள்ளிக் குழந்தைகள் 17-4-85 அன்று நடந்த நிகழ்ச்சியில் இக்கலைத் திறன்களை யெல்லாம் வெளிப்படுத்தினார்கள். அவர்கள் வெளிப்படுத்திய கலைத்திறன்கள் யாவும் பாராட்டத் தக்க நிலையிலிருந்தன.

செய்திகள்

நிகழ்பவை

மே மாதம் 16, 17 தேதிகளில் மாதேஸ்வரன் மலையில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் இரண்டு நாள் அந்தர் யோகம் நடாத்துவார்கள். முழு விவரம் சித்திரை மாதத் தர்ம சக்கரத்தில் அட்டை நான்காம் பக்கத்தில் வந்துள்ளது.

மதுரை ஜில்லா, திருவேடகம் விவேகானந்த கல்லூரியில் 22—5—85 முதல் 28—5—85 வரை இந்து பண்பாட்டுப்பயிற்சி முகாம்நடைபெறும். இதில் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியைகள் கலந்து கொள்ளலாம். முழு விவரம் வேண்டுவோர் முதல்வர், விவேகானந்தக் கல்லூரி, திருவேடகம் மேற்கு-624215, மதுரை ஜில்லா என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

திருப்பராய்த்துறை ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுலத்தில் மே மாதம் 30ஆம் தேதி புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய தேர்வு நடைபெறும். அன்று காலை 9 மணிக்குள் சேர விரும்பும் புதிய மாணவர்கள் தேர்வு எழுதத் தயாராகத் திருப்பராய்த்துறை தபோவனம் வந்து சேரவேண்டும். இது சம்பந்தமான விவரங்களைச் சித்திரை மாதத் தர்ம சக்கரம் அட்டை இரண்டாம் பக்கம் பார்த்துத்தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தமிழ் வியாக்கியானம்		ரூ. 26-00
திருவாசகம்	பிரசாரவிலை ...	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, ...	21-00
மஹாபாரதம்	,, ...	8-00
இராமாயணம்	,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	6-50
தினசரி தியானம்	,, ...	5-00
ஞானயோக விளக்கம்	...	15-00
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
விவேகானந்த விவரணம்	...	7-50
விவேகானந்த உபநிஷதம்	...	7-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
மாணவருக்கு ஒரு சொல்	...	4-50
சகோதரி நிவேதிதை	...	3-75
சுவாமி விவேகானந்தர்	...	3-50
பஜனைப்பாடல்கள்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அநுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை ...	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை ...	2-50
மலைவளர் காதலி	ஷை ...	1-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி	...	2-50
சந்நியாசி	...	2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்) ...	2-50
ஹரிச்சந்திரன்	ஷை ...	2-00
நவப்புதல்வர்கள்	ஷை ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம்	ஷை ...	1-75
விபீஷணன் சரணாகதி	ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரி	...	1-50
மாணாக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
*ஆலய வழிபாடு	...	1-25
*ஆத்ம சக்தி	...	1-25
*மனிதனது நிஜசொரூபம்	...	1-25
*சிவதத்துவம்	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) ...	2-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்) ...	1-00
தபோபலன்	(நாடகம்) ...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	,,...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*கணபதி	...	1-00
*சக்தி தத்துவம்	...	0-90
*சூரியநாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
*முருகக்கடவுள்	...	0-75
வர்ணாச்ரம தர்மம்	...	0-75
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
*விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	...	10-00
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-40
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-30
The Bhagavad Gita (12th Imp.)	...	30-00
Sri Lalithambika Sahasranama Stotram		15-00
The Indian National Education	...	10-00
Tirukkural (with plastic cover)	...	9-00
Ramakrishna lives Vedanta	...	8-00
Mahaveer Sri Hanuman	...	7-75
Man Making Message	...	7-00
Siva Sahasranama Stotram	...	7-00
Ramayana (with plastic cover)	...	7-00
Mahabharata ,,	...	6-00
The Bhagavad Gita (Small Size)	...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Daily Divine Digest (DELUXE)	...	6-00
Daily Divine Digest (Ordinary)	...	4-00
Facets of Brahman or The Hindu Gods	..	5-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
Thus Speaks Tayumana Swamigal	...	3-50
*Introducing The Gita	...	2-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
The Nursery School	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The Student	...	1-25

*இக்குறியிட்ட தலைப்புகள் பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

குற்ருலத்தில் பருவ அந்தர்யோகம்

15—6—85 முதல் 15—8—85 முடிய

திருக்குற்ருலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி முதல் ஆகஸ்டுமாதம் 15ஆம் தேதி முடிய இரண்டு மாதங்களுக்கு கீழ்க்கண்ட சாதனை முறைப்படி அந்தர்யோகம் நடைபெறும். கடிதம் மூலம் குற்ருலத்துக்கு எழுதி முன்கூட்டி அனுமதிபெற்று ஒருவர் மூன்று தினங்களுக்குக் குறையாமலும், பத்து தினங்களுக்கு மேற்படாமலும் இந்த இரண்டு மாதங்களுக்கு நடைபெறும் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் பதினைந்து வீதம் ஆச்ரமத்துக்கு வந்தபின் நேரில் செலுத்தினுல் போதுமானது. படுக்கை வசதிக்குத் தேவையானதை உடன் கொண்டுவரவேண்டும். தாய்மார்களும் பருவ அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் தங்குவதற்குத் தனி இடவசதி இருக்கிறது. நடைமுறையைப்பின்பற்ற இயலாதவர்களும் 12வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளும் அந்தர்யோகத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
திருப்பளளியெழுச்சி, தியானம், நாமஜபம்	4-30	5-15
ஐந்தருவி ஸ்நானம்	5-25	7-00
தியானம்	7-00	7-30
சிற்றுண்டி	7-30	
பஜனை	10-00	10-30
உபந்யாசம்	10-30	11-00
தியானம	11-00	11-15
அர்ச்சனை, தீபாராதனை	11-15	11-30
உணவு	12-00	

மாலை

	மணிமுதல்	மணிவரை
பஜனை	3-00	3-30
உபங்யாசம்	3-30	4-00
தியானம்	4-00	4-15
சிற்றுண்டி	4-15	
நாமபஜனை, ஆரத்ரிகம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-30	
சத் சம்பாஷணை	8-00	8-30

சுவாமி குஹானந்த

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
குற்ருலம்-627 802, (வழி) தென்காசி

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை-639 115. திருச்சி ஜில்லா.

இக்குருகுல உயர்நிலைப்பள்ளியில் 4, 5, 6, 7 ஆம் வகுப்புக்களில் மட்டும் புதிய மாணவர்களுக்கு, அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றை நேரில் பரிசோதித்தபின் இடமளிக்கப்படும். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30 ஆம் தேதி காலை 9 மணிக்குள் மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். நுழைவுத் தேர்வுகள் அன்று நடத்தப்பெற்று தேர்வு முடிவுகள் அன்றிரவே அறிவிக்கப்படும் தேர்வு முடிவு அறிவித்தவுடன் பொறுப்புத்தொகை ரூ. 300ம், சாமான்கள் பொருட்டு ரூ. 400ம் ஆக ரூபாய் 700 முன் பணம் செலுத்த ஆயத்தமாக இருக்கவேண்டும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்ப வேண்டியதில்லை: மற்ற நாட்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. இலவசமாகவோ குறைந்த செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. போதனமொழி தமிழ். மேலும் விவரம் வேண்டுவோர் 75 பை. தபால்தலை அனுப்பி "வித்யாவன குருகுலச் சட்டதிட்டங்கள்" என்னும் புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளுங்கள்.

S. ஈசுவரன்
தலைமை ஆசிரியர்

சித்பவானந்த
தலைவர்

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.